வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 04 29.09.2023 வெள்ளிக்கிழமை இதழ் : 293 பக்கங்கள் : 16




## உயிர் அச்சுறுத்தல் - அழுத்தங்களால்

# நீதிபதி சரவணராஜா பதவிதுறந்து நாட்டை விட்டு வெளியேறினார்!


DISTRICT/MAGISTRATE'S COURT, MULLAITIVU.

23.09.2023

Hon. Secretary,
Judicial Services Commission,
Colombo 12.

RESIGNATION LETTER

I hereby inform you that I resign my post of District Judge, post of magistrate, post of family court Judge, post of primary court Judge, post of small claims court Judge, post of Juvenile court Judge due to threat of my life and due to lot of stress.

Please accept my resignation.

Thank you.

T.Saravanarajah
District Judge & Magistrate
District & Magistrate's Court
Mullaitivu.


கோப்புப் படம்

**கொழும்பு, செப்ரெம்பர். 29**

**குருந்தூர்மலை விகாரை நிர்மாணம் தொடர்பான வழக்கில் முக்கிய தீர்ப்புகளை வழங்கிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியும் நீதிவானுமான ரி. சரவணராஜா உயிர்அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்களால் பதவி - பொறுப்புகள் அனைத்தையும் துறந்து நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.**

தற்போது புலம்பெயர் நாடு ஒன்றில் உள்ள நீதிபதி ரி. சரவணராஜா ஊடகங்களுக்கு தெரிவித்தவை வருமாறு,

குருந்தூர்மலை வழக்கில் வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரச தரப்பால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மற்றும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்துக்கு வெளியிலும் எனக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

"அண்மையில் எனக்கான பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்ட அதேவேளை, புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக என்னைக் கண்காணித்து வந்தனர்.

சட்டமா அதிபர், என்னை தனது பணிமனைக்கு கடந்த 21.09.2023ஆம் திகதி அன்று சந்திக்க வருமாறு அழைத்து குருந்தூர் மலை வழக்கின் நீதிமன்ற கட்டளைகளை மாற்றி

11

## 13ஆம் திருத்தத்தையாவது அமுல்படுத்த வேண்டும்!

### விக்னேஸ்வரன் எம். பி.



யாழ்ப்பாணம், செப். 29

13ஆவது திருத்தச்சட்டத்தையாவது நாம் வலுவாக நடைமுறைப்படுத்த வேண்டும். நாங்கள் அதைத்தான் செய்து கொண்டிருக்கின்றோம். ஜனாதிபதியை கண்டு பேசி அதற்குரிய நடவடிக்கைகளை வருங்காலத்தில் எடுப்போம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பதவி வகிக்கும் நிர்வாக அதிகாரி

11



வரலாற்று பிரசித்திபெற்ற வடமராட்சி – வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தேர்த்திருவிழாவில் நேற்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றிருந்தபோது...!

## மின்சார கட்டணத்தை மீளவும் உயர்த்த முடிவு

### ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

கொழும்பு, செப். 29

அரசாங்கம் வருமானத்தின் மீது அதிக வரி விதித்து சாதாரண மக்களை மேலும் மேலும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் மூன்றாவது முறையாக மின்சார கட்டணத்தை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எமக்கு அறியக் கிடைத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளி,

11

## ஐ. எம். எவ். கடனை பெறும் பேச்சுகளில் சாதக நிலை!

### பதில் நிதி அமைச்சர் செஹான்

கொழும்பு, செப். 29

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணை கடனை பெற்றுக்கொள்வதற்கான பேச்சுகள் சாதகமான முறையில் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவித்த பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க, அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு சர்வதேச நாணய நிதியம் பாராட்டு தெரிவித் துள்ளதாகவும் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்

11

## தமிழர் தரப்பில் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர்!

### த.தே.கூட்டமைப்பு தீர்மானம்

பாராளுமன்றில் தனித்து இயங்க தீர்மானம்
மோடியை சந்திக்கவும் முயற்சிக்க முடிவு

யாழ்ப்பாணம், செப். 29

அடுத்த ஆண்டு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை தமிழர் தரப்பு சார்பில் நிறுத்துவது என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற

11

## வரலாற்றிலிருந்து பாடம் கற்று இலங்கை மீளெழ வேண்டும்!

### அமெரிக்க தூதுவர் ஜூலி சங்



கொழும்பு, செப். 29

"இலங்கை அதன் வரலாற்றில் கற்றுக்கொண்ட பாடங்களின் ஊடாக மீண்டெழுவதற்கான சந்தர்ப்பமாக இந்த நெருக்கடியான தருணத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்." என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

அவர் ஒரு கலைஞர். பிரபல அறிவிப்பாளர். மேடை நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதில் கெட்டிக்காரர்.

அவர் திடீரென்று இன்னுமொரு கலைஞரை ஆசிரியராகக் கொண்டு பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க விருப்பதாக விளம்பரப்படுத்தியிருந்தார்.

அந்தக் கலைஞரும் முன்னர் பத்திரிகையாளராக இருந்ததை நான் அறியவில்லை. ஒரு கலைஞர் இன்னுமொரு கலைஞரை ஆசிரியராகக்கொண்டு பத்திரிகை தொடங்கவிருப்பதாக விளம்பரங்களை வெளியிட்ட போது ஆச்சரியப்படாமல் இருக்கமுடியவில்லை.

ஆசிரியராக பணியாற்றவிருந்த அந்தக் கலைஞரும் ஈழத்தில் திரைப்படங்களில் நடித்து பிரபலமான கலைஞர்தான்.

இப்போதெல்லாம் பத்திரிகை வெளியிடுவதெனில் கொம்பியூட்டரில் தமிழ் எழுதத் தெரிந்திருந்தால் போதுமானதுதானே. அதனையும்விட கொஞ்சம் கொம்பியூட்டர் அறிவும் இருந்தால் பிறகு என்ன? பத்திரிகையை வெளியிட்டுவிடலாம்தானே.

இந்த கலைஞர்களின் பத்திரிகை முயற்சி பற்றிய விளம்பரத்தை பார்த்த பின்னர் ஒருநாள் அவரை வீதியில் சென்றுகொண்டிருந்தபோது எதிர்கொள்ள முடிந்தது.

என்னைக் கண்டதும் அவராகவே விசயத்தை சொன்னார். கைப்பையில் இருந்து பத்திரிகை பற்றிய துண்டுப்பிரசுரம் ஒன்றைத் தந்தவர், 'கேள்விப்பட்டிருப்பியள்தானே...' என்றவாறு தொடர்ந்தார்.

'என்ன செய்வது நாங்கள் இத்தனை காலமாக கலைத்துறையில் இருக்கின்றோம். ஆனால், நீங்கள் உங்கள் பத்திரிகையில் எங்களைப்பற்றி கண்டுகொள்கிறீர்களே இல்லை. அதுதான் நாங்களாகவே பத்திரிகையைத் தொடங்கியாவது எங்களைப் பற்றி எழுதலாம் என்று முடிவெடுத்தோம்' என்றார்.

இந்தச் சம்பவம்தான் அந்தச் செய்தியை அறிந்த போது ஞாபகத்துக்கு வந்தது.

ஓர் அரசியல் பிரமுகர் ஊடகங்களுக்கு முன்னால் பேசுகின்ற புகைப்படம் ஒன்றை பார்க்கமுடிந்தது.

அந்த பிரமுகர் முன்னால் ஏராளமான ஊடகங்களின் மைக்குகள் வைக்கப்பட்டிருந்தன.

அவர் என்ன சொன்னார் என்பதை அறிந்து அதனை 'ஈழநாடு'வுக்கு செய்தி ஆக்குவதற்காக டான் செய்திப்பிரிவுடன் தொடர்புகொண்டு கேட்டேன்.

ஏனெனில் அவர் முன்னால் டான் ரீ. வி. மைக்கும் இருந்தது. அப்படியெனில் டான் ரீ. வியின் செய்தியாளர் அங்கே போயிருக்கிறார் என்பதை தெரிந்ததால் அவர்களிடமிருந்து செய்தியைப் பெறமுயன்றோம்.

அந்த அரசியல்வாதியிடமிருந்து இதுவரை எந்த வொரு செய்தியும் கிடைக்கவில்லை என்றார்கள். கிடைத்ததும் தொடர்புகொள்வதாக பொறுப்பாசிரியர் கூறியிருந்தார்.

ஆனால், அன்று முழுவதும் அவர் தொடர்பு கொள்ளவே இல்லை.

மறுநாள் அந்த அரசியல்வாதியின் செய்தியை யார் கவனித்தார்கள் என்பதை கேட்டு அறியுமாறு மீண்டும் கேட்டபோதுதான் விசயம் தெரியவந்தது.

அது அந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களே நாட்டிலுள்ள எல்லா ஊடகங்களின் லோகோக்களையும் தாங்களே பிறின்ற் பண்ணி, மைக்குகளைச் செய்து வைத்திருப்பதாகவும் தமது கட்சி ஊடகப் பொறுப்பாளர் பின்னர் அதனை ஊடகங்களுக்கு (அதுவும் தமக்கு வேண்டியவற்றுக்கு) அனுப்புவதாகவும் தெரியவந்தது.

அப்படி எல்லா ஊடகங்களின் செய்தியாளர்களும் அதனை 'கவர்' பண்ணியிருந்தால் அந்த ஊடகங்களும் அந்தச் செய்தியை வெளியிடும் என்பதால் மற்றவர்களும் அதனை வெளியிடுவார்கள் என்ற 'அரசியல்' அது.

அதாவது டான் ரீ. வி. மைக் இருந்தால் டான் ரீ. வி. அதனை வெளியிடும் அதனால் டான் ரீ. விக்கு போட்டியான ஊடகங்களும் அதனை வெளியிடுவார்கள் அல்லவா?

அரசியல்வாதிகள் இப்போதெல்லாம் தாமே பினாமிகளாக இருந்து ஊடகங்களை ஆரம்பிப்பது பற்றித்தான் அறிந்து வைத்திருக்கின்றோம்.

ஆனால், இது கொஞ்சம் வித்தியாசமாக இருந்தது. அதற்காக அந்தக் கட்சியாலும் பத்திரிகைகளை ஆரம்பிக்க முடியாது என்பதல்ல. அவர்கள் காட்டில் தான் புலம்பெயர் மண்ணிலிருந்து நல்ல மழை பெய்துகொண்டிருக்கின்றதே.

**- ஊர்க்குருவி.**

# இலங்கை கல்வித்துறையில் நீண்டகால நெருக்கடி வரும்!

## கல்வி நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, செப். 29

உயர்தரப் பரீட்சை பிற்போடப்பட்டால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பட்டப் படிப்புகளுக்கான வயது வரம்பு மீறப்பட்டு இலங்கை கல்வியில் நீண்டகால நெருக்கடி ஏற்படலாம் என கல்வி நிபுணர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளனர்.

தேர்வுகளை ஒத்திவைப்பது குறித்து தீர்மானிக்கும் போது அந்த விடயங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என கல்வி நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டுகளில், கொரோனாத் தொற்று, பொருளாதார நெருக்கடிகள் போன்றவற்றால், தேர்வுகள் தாமதமாகி, பாடசாலை கல்வி தடைப்பட்டதையும் கல்வி நிபுணர்கள் நினைவு கூர்ந்தனர்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த கல்வி நிபுணர்கள், 2023 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை ஜனவரி 2024 வரை ஒத்திவைக்கப்பட்டால், அந்த ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடைபெறவிருந்த கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2024 மே மற்றும் ஜூன் வரை ஒத்திவைக்கப்பட வேண்டும்.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களுக்கு இம்முறை போன்று கூடுதல் நேரம் வழங்கப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மீண்டும் 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அல்லது 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை ஒத்திவைக்கப்படும் என்றும், இலங்கைக் கல்வியில் ஏற்கனவே ஏற்பட்டுள்ள பின்னடைவை சரிசெய்வது மேலும் தாமதமாகும்." என தெரிவித்தனர்.

இதேவேளை, தேர்வுகள் ஒத்திவைப்பு, பாடசாலை பருவக் குறிப்புகள் தாமதம், பாடசாலைகளில் குழந்தைகள் சேர்க்கை, 11, 12ஆம் வகுப்பு குழந்தைகள் சிறிது நேரம் தங்க வேண்டிய நிலை, வகுப்பறைகளில் இடப் பிரச்னை, உயர்தரத்திற்கான சேர்க்கை தாமதம், சேர்க்கை நேரம் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களின் உதவித்தொகை இழப்பு, அரச துறை ஆட்சேர்ப்பு தாமதம் போன்ற நீண்டகால விளைவுகளை ஒரு மாணவன் சந்திக்க நேரிடும் என கல்வி நிபுணர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், 18 வயதிலேயே உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய மாணவர்கள், பரீட்சைகள் பிற்போடப்பட்டமையினால், அந்த வயதும் மீறப்பட்டுள்ளதாக அந்த கல்வி நிபுணர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சமூக ஊடகச் செயற்பாட்டாளரிடம் 50 கோடி நட்டஈடு கோரும் விஜயதாச



கொழும்பு, செப். 29

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தனது நற்பெயருக்கு ஏற்பட்ட சேதத்திற்காக 500 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்குமாறு சமூக ஊடக செயற்பாட்டாளர் கீர்த்த ரத்நாயக்க என்பவருக்கு நட்டஈடு கோரிய கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

கீர்த்தி ரத்நாயக்கவினால் பராமரிக்கப்படும் சமூக ஊடகக் கணக்கில் வெளியிடப்பட்ட தவறான செய்திகளால் தனது நற்பெயருக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக விஜயதாச குறித்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், தொகையை செலுத்தாவிட்டால், இரண்டு வாரங்களின் பின்னர் வழக்கு தொடரப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஆறுகளின் நீர் மட்டம் உயர்வு

கொழும்பு, செப். 29

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நாட்டில் உள்ள பல ஆறுகளின் நீர்மட்டம் உயர்வடைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், ஜின் கங்கையை அண்மித்த பத்தேகம தாழ்நிலப் பகுதிக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

அத்துடன், நில்வளா கங்கையை அண்மித்த பனந்துகம தாழ்நிலப் பகுதிக்கும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

களுகங்கையை அண்மித்த கலவெள்ளாவ தாழ்நிலப் பகுதிக்கும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## தேசிய கடன் முகாமைத்துவ நிறுவகம் அமைக்க அனுமதி

கொழும்பு, செப். 29

தேசிய கடன் முகாமைத்துவ நிறுவகம் ஒன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2022 ஆம் ஆண்டின் உப வரவு -செலவுத் திட்ட, நிறுவன சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக, அரச கடன் முகாமைத்துவ நிறுவகத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியின் கட்டமைப்பிற்குள் கூட, கடன் முகாமைத்துவ மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவது முதன்மையான முன்னுரிமையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த உத்தேச அரச கடன் முகாமைத்துவ நிறுவகத்தை நிறுவுவதற்கு ஐ. எம். எவ். மற்றும் உலக வங்கி தொழில்நுட்ப உதவி களை வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடன் நிர்வாகத்தை சீர்திருத்துவதற்கான திட்டம், கடன் நிர்வாகத்துக்கான நிறுவன அமைப்பு மற்றும் சட்ட கட்டமைப்பு அனைத்தும் இந்த கட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, அரச கடன் முகாமைத்துவ சட்டத்தைத் தயாரிக்க சட்ட வரைவு ஆசிரியருக்கு அறிவுறுத்துமாறு செயல் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. (ஐ)

# தூங்கா நகரங்கள் வேண்டும்!

கொழும்பு, செப். 29

இந்த வருட இறுதிக்குள் 15 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு வரவழைப்பதற்கு அவசியமான ஊக்குவிப்புத் திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்திருப்பதாக சுற்றுலாத்துறை பதில் அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளதெனவும், அவர்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக ரக்ஸி சேவைகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் பதில் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் சுற்றுலா ஈர்ப்பு மிக்க நகரங்களை தூங்கா நகரங்களாக மாற்றியமைக்கவேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் ஆரம்ப பகுதியில் 10 இலட்சம் சுற்றுலாப் பிரயாணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த நிலையில் இந்த வருட இறுதிக்குள் 15 இலட்சம் பேரை நாட்டிற்கு வரவழைக்க முடியும் என எதிர்பார்த்திருப்பதாகவும், அவர் குறிப்பிட்டார்.

வருடத்தின் இறுதி காலப் பகுதியிலேயே நாட்டுக்கு சுற்றுலாப் பிரயாணிகளில் வருகை அதிகமாக காணப்படும் நிலையில், பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து பெருமளவான சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு வரவழைக்க வேண்டியது அவசியமாகும் என சுற்றுலாத்துறை பதில் அமைச்சர் டயனா கமகே தெரிவித்துள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu
29.09.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# காலிஸ்தான் ஆபத்து

இந்தியாவால் பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டிருக்கும் ரைகர் போஸ் - எனப்படும் காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பின் தலைவர் ஒருவர் கடந்த ஜுன் மாதம் கனடாவில் வைத்து கொல்லப்பட்டார். இரண்டு மாதங்கள் கழித்து கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ இதற்கு பின்னால் இந்திய முகவர் இருந்ததற்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன என்று கூறுகின்றார். இதனைத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர நெருக்கடிகள் அதிகரித்திருக்கின்றன. குற்றச்சாட்டை முன்வைத்த கனடிய பிரதமர் ட்ரூடோ இதுவரையில் அதற்கான ஆதாரங்களை வெளியிடவில்லை.

இதற்கிடையில் காலிஸ்தானியர்களும் எங்களை போன்று விடுதலைக்காக போராடும் மக்கள் என்பதை புரிந்துகொள்ள வேண்டுமென்று கூறும் - தமிழ் குரல்களையும் காணமுடிகின்றது. தமிழ் சூழலில் நுனிப்புல் மேய்ப்பவர்கள் அரசியல் கருத்துகளை முன்வைக்கக் கூடியவர்களாக இருப்பதானது தமிழர் அரசியலை பீடித்திருக்கும் ஒரு சாபக்கேடாகும்.

காலிஸ்தான் பிரிவினைவாத தரப்புகளை ஈழத் தமிழர்கள் ஆதரிக்கலாமா? இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில், சீக்கியர்களுக்கான தனிநாடு ஒன்றை கோரி வரும் தரப்பினரே காலிஸ்தான் பிரிவினைவாதிகளாவர். இந்திய மாநில ஆட்சி முறைமையானது - அனைத்து இன மக்களுக்கும் போதிய அதிகாரங்களை வழங்கியிருக்கின்றது.

இந்தியாவில் சீக்கியர்களுக்கு பிரத்தியேக பிரச்னைகள் எதுவுமில்லை. எனினும், சீக்கியர்களுக்கான தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து இவ்வாறான காலிஸ்தான் ஆதரவாளர்கள் இந்தியாவுக்கு வெளியில் செயல்பட்டு வருகின்றனர். அவ்வாறான காலிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு கனடா ஒரு பாதுகாப்பான அரணாக செயல்பட்டு வருவதாக இந்தியா நீண்டகாலமாக குற்றஞ்சாட்டி வருகின்றது. இந்தியாவுக்கு எதிரான பல்வேறு விடயங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்திக் கொண்டிருந்தவர்களில் முக்கியமான ஒருவரே தற்போது கொல்லப்பட்டிருக்கின்றார்.

குறித்த நபரின் கொலைக்கு பின்னால் பாகிஸ்தான் உளவுத்துறை செயல்பட்டிருக்கலாம் என்னும் புலனாய்வு தகவலை எக்கனொமிக் ரைம்ஸ் வெளியிட்டிருக்கின்றது. பாகிஸ்தானுக்கும் காலிஸ்தான் செயல்பாட்டாளர்களுக்கும் இடையில் நெடுங்கால தொடர்பு உண்டு.

1971இல் இந்திய - பாகிஸ்தான் யுத்தத்தில் பாகிஸ்தான் தோல்வியடைந்ததிலிருந்து காலிஸ்தான் தீவிரவாதத்தை வளர்ப்பதன் ஊடாக இந்தியாவை உடைக்கும் வேலைத் திட்ட மொன்றை பாகிஸ்தானிய வெளியக உளவுத் துறையான ஐ. எஸ். ஐ. முன்னெடுத்து வருகின்றது.

புலனாய்வு தகவல்களின்படி, தற்போது கொல்லப்பட்டிருக்கும் காலிஸ்தான் தலைவர் 2012இல், பாகிஸ்தானுக்கு சென்று வெடிகுண்டுகளை கையாளும் விசேட பயிற்சிகளை பெற்றிருந்தாரெனத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

காலிஸ்தான் தனிநாட்டுக் கோரிக்கையை வலுவடையச் செய்வதில் பாகிஸ்தானின் கரங்கள் இருக்கின்றன. - இதே போன்று, சுதந்திர காஷ்மீருக்கான சர்வஜன வாக்கெடுப்பையும் பாகிஸ்தான் வலியுறுத்தி வருகின்றது. பாகிஸ்தானின் இந்த நகர்வுகள் விடுதலைக்கானதல்ல மாறாக இந்தியாவை உடைத்து பலவீனப்படுத்துவதற்கான முயற்சிகளே இவைகள். இதனை புரிந்துகொள்ளாமல் காலிஸ்தானியர்களை விடுதலைப் போராளிகளென்று ஈழத் தமிழர்கள் எவரேனும் கூறுவார்களாயின் அவர்கள் - அரசியலை அறியாதவர்கள் - அதேவேளை தாயகத்தில் வாழும் மக்களின் எதிர்காலத்தைப் பற்றி சிறிதும் அக்கறையில்லாதவர்கள்.

# 8 வயதுச் சிறுமியின் அகற்றப்பட்ட கையின் ஒரு பகுதி கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு

*யாழ்ப்பாணம், செப். 29*

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், 8 வயதுச் சிறுமியின் அகற்றப்பட்ட கையின் ஒரு பகுதியை உடற்கூற்றுப் பரிசோதனைக்காகக் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்புமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாவட்ட நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், நீதிபதி அ.ஆனந்தராஜா இந்த உத்தரவை பிறப்பித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட சிறுமி ஒருவருக்கு கடந்த 02ஆம் திகதி கையின் ஒரு பகுதி சத்திர சிகிச்சை மூலம் துண்டிக்கப்பட்டது.

மல்லாகம் - பகுதியைச் சேர்ந்த 8 வயதான சிறுமி ஒருவருக்கே இவ்வாறு கையின் ஒரு பகுதி துண்டிக்கப்பட்டது.

4 நாட்களாக குறித்த சிறுமிக்கு காய்ச்சல் நிலவியதை அடுத்து தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்ற போதிலும் அவர் குணமடையாமையால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் குறித்த சிறுமிக்கு, உடலுக்கு மருந்துகளைச் செலுத்தும் கனுலா பொருத்தப்பட்டு அதனூடாக மருந்துகள் செலுத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில் கனுலா பொருத்தப்பட்ட கை செயலிழந்தமையை அடுத்து வைத்தியர்கள் அவரது கையின் ஒரு பகுதியை சத்திர சிகிச்சை மேற்கொண்டு துண்டித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுமியின் கை அகற்றப்பட்டமைக்கு விடுதியில் கடமையாற்றியவர்களின் அலட்சியமே காரணம் என்று சிறுமியின் பெற்றோர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்தனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாவட்ட நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்தநிலையில், சிறுமியின் துண்டிக்கப்பட்ட கையை கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட விசேட உடற்கூற்று நிபுணர் ஒருவர் ஊடாக உடற் கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்த காவல்துறையினர் கோரியமைக்கு அமைய நீதிமன்றம் குறித்த கட்டளையை பிறப்பித்துள்ளது.

குறித்த வழக்கு எதிர்வரும் 11ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (அ)

## முழுநிலா நாள் சிறுவர் கலையரங்கம்!

*யாழ்ப்பாணம், செப். 29*

இணுவில் அறிவாலயம் நடத்தும் முழுநிலா நாள் சிறுவர் கலையரங்கும் திருக்குறள் மனனப் போட்டி பரிசளிப்பு நிகழ் வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இணுவில் அறிவாலயம் செயலாளர் வ. தனகோபி தலைமையில் அறிவாலய மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி முன்னாள் முகாமையாளர் வை. சிறீஸ்கந்தவரோதயன், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் சா. முத்துக்குமாரசாமி, கௌரவ விருந்தினராக விவசாயி இ. பால்ராஜன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ஐ)

# சுழிபுரம் புத்தக அரங்க விழாவின் இரண்டாம் நாள் மாலை நிகழ்வுகள்

*யாழ்ப்பாணம், செப். 29*

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டையொட்டி “நூறு மலர்கள் மலரட்டும்“ என்ற தொனிப்பொருளில் புத்தக அரங்க விழா சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது.


தொடர்ந்து நான்கு தினங்கள் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை இரண்டாம் நாள் நிகழ்வுகள் மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதல் நிகழ்வாக கர்நாடக சங்கீத விற்பன்னரான கலாபூஷணம் சி.சிவானந்தராஜாவின் “புதுமையும் பழமையும்” கவிதை நூல் வெளியீடு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகம் மற்றும் நுண்கலைத் துறைகளின் முன்னாள் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், ஆசியுரையை ஆசுகவி கலாபூஷணம் செ. சிவசுப்பிரமணியம், நூல் வெளியீட்டுரையை சிரேஷ்ட சட்டத்தரணி சோ. தேவராஜா, நூல் மதிப்பீட்டுரையை ஆசிரியரும் கலை இலக்கிய செயல்பாட்டாளருமான ந. குகபரன், பதிலுரையை கலாபூஷணம் சி.சிவானந்தராஜா ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து, மாலை 5 மணியளவில், சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில், மருத்துவப் பேராசிரியர் நந்தியின் சிறுகதையைத் தழுவி, ஆசிரியர் பு. கணேசராசா எழுதி, நெறியாள்கை செய்து இருபதுக்கு மேற்பட்ட அரங்குகளைக் கண்ட “காதலுக்கு மருந்து” நாடகமும், பல அரங்குகளைக் கண்ட “என்னவென்று சொல்வேனடி“ நாடகமும் நடைபெறவுள்ளன.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்கும்படி நடந்து கொள்வீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**இடபம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். திறமை வெளிப்படும். கடமை உணர்வுடன் செயல்படும் நாள்.

**மிதுனம்**
உங்கள் பிடிவாத போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள்.வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நல்லன நடக்கும் நாள்.

**கன்னி**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகள் எடுப்பார்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**துலாம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களை மதித்துப் பேசுவார்கள் கனவு நனவாகும் நாள்.

**விருட்சிகம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வாகன வசதி பெருகும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உங்களின் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வவியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். இங்கிதம் தேவைப்படும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

# நாட்டை சிதைக்க நினைப்போரே சனாதனத்தை எதிர்க்கின்றார்கள்

## தமிழக ஆளுநர் ரவி

சென்னை, செப். 29

நாட்டை சிதைக்க நினைப்பவர்களே சனாதனத்துக்கு எதிராக பேசுகிறார்கள் என தமிழக ஆளுநர் ஆர். என். ரவி விமர்சித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நமது நாட்டில் ஆன்மிகவாதிகள் சென்ற இடமெல்லாம் புண்ணிய பூமியாக மாறியுள்ளன. சனாதனத்தை ஜி-20 என்ற பெயரில் இரு வாரங்களாக உலக நாடுகள் டில்லியில் கொண்டாடின. உலகளவில் அனைவருக்கும் சனாதன தர்மத்தை எடுத்துச் செல்ல வேண்டும். சனாதன தர்மத்துக்கு தொடக்கமும் முடிவும் இல்லை. சனாதன தர்மம் நிலைத்துநிற்க ரிஷிகள், முனிவர்கள் போன்றோரின் பங்களிப்பு மிக அதிகமாக இருந்துள்ளது.

சனாதனத்தின் அடிப்படை அத்தியாயம் நம் வேதங்களில் உள்ளது. ரிஷிகள், முனிவர்கள் வாழ்வியல் தத்துவத்தை அடிப்படையாக கொண்டு நமக்கு அதை தந்துள்ளனர். நமது பாரத தேசம் எந்த ஒரு ராஜாவாலும் உருவாக்கப்படவில்லை. இது ஒரு தனித்துவமான நாடு. இதை ஐரோப்பிய அரசியல் சிந்தனை கொண்டவர்களால் புரிந்து கொள்ள முடியாது.

பாரதம் உருவானதே சனாதன தர்மத்தில்தான். சனாதனத்தில் எல்லாம் உள்ளது. நவீன கல்வியை பெற்றவர்களாலும் பாரதத்தை புரிந்து கொள்ள முடியாததாலேயே இந்தியா என அழைத்தனர். ஆனால் அரசமைப்புச் சட்டத்தின் முதல் இடத்திலேயே இந்தியாவை பாரதம் என அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார். ஹபாரத்' என்பது சனாதன தர்மத்தின் எடுத்துக்காட்டாக உள்ளது.

சனாதன தர்மத்தின் மிகவும் முக்கியமான பகுதியாக தமிழ்நாடு இருக்கிறது. சனாதனம் தொடர்பான ஒரு இலட்சம் கல்வெட்டுகள் உள்ளன. உத்திரமேரூர், மானூர் போன்ற பல்வேறு இடங்களில் அதனை பார்க்கலாம். எனவே, சனாதனத்தை ஒருபோதும் ஒழிக்க முடியாது. அது, மண்ணோடும், மக்களோடும் நெருக்கமாக உள்ளது. சனாதன தர்மம் உலகத்தின் தேவையாக உள்ளது.

யாரெல்லாம் சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என பேசுகிறார்களோ அவர்கள் இந்த நாட்டை சிதைக்க பார்க்கிறார்கள் என்பதுதான் உண்மை. எனவே, நாம் மிக கவனமாக இருக்க வேண்டும் - என்றார்.

(ஐ)

# இனி எந்த சூழ்நிலையிலும் பா. ஜ. கவுடன் கூட்டணி இல்லை!

## அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர்

கிருஷ்ணகிரி, செப். 29

“இனி எந்த சூழ்நிலையிலும் பா. ஜ. கவுடன் அ. தி. மு. க. உறுதியாக கூட்டணியில் இருக்காது. பாராளுமன்றத் தேர்தலில் மட்டுமல்ல, 2026இல் நடைபெறும் சட்டமன்றத் தேர்தலிலும் பா. ஜ. கவுடன் கூட்டணி இருக்காது” என்று அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் கே. பி. முனுசாமி கூறியுள்ளார்.

அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

“வரும் 25ஆம் திகதி அ. தி. மு. க. தலைமை பணிமனையில் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், ஏற்கெனவே எங்களுடன் கூட்டணியில் இருந்த, பா. ஜ. கவின் மாநில தலைமை எங்கள் இயக்கத்தை பற்றியும், தலைவர்கள் பற்றியும் பல்வேறு விமர்சனங்கள் செய்த காரணத்தால், ஏற்கெனவே மறைந்த முதல்வர் ஜெயலலிதா குறித்து விமர்சனம் செய்ததைக் கண்டித்து ஒரு கண்டனத் தீர்மானமே அ. தி. மு. க. சார்பில் நிறைவேற்றப்பட்டது.

இதைத் தொடர்ந்தும், பா. ஜ. கவின் மாநிலத் தலைமை, பேரறிஞர் அண்ணா குறித்தும், கட்சியின் பொதுச் செயலாளர் குறித்தும் விமர்சனம் செய்தார். அந்த விமர்சனங்கள் அனைத்தும் உண்மைக்கு மாறான விமர்சனங்களாக இருந்ததால், தமிழகத்தில் உள்ள இரண்டு கோடி தொண்டர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து வெளியேறுவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், ஊடக விவாதங்களில், நேரம் வரும்போது அ. தி. மு. க., பா. ஜ. கவுடன் கூட்டணி சேர்ந்துவிடும் என்று கூறி மக்களை திசைதிருப்ப முயற்சித்து வருகின்றனர். முதல்வர் ஸ்டாலினும், அமைச்சர் உதயநிதியும், அ. தி. மு. க. ஒரு நாடகம் நடத்திக் கொண்டிருப்பதாகவும் நேரம் வரும்போது பா. ஜ. கவுடன் இணைந்து விடுவார்கள் என்றும் கூறி இருக்கின்றனர். அ. தி. மு. க. கூட்டணியில் இருந்து பா. ஜ. கவை வெளியேற்றிய உடன் ஏற்பட்ட அச்சத்தின் காரணமாக அவர்கள் இதுபோல உளறி வருகின்றனர்.

அ. தி. மு. க. கூட்டணியில் இருந்து பா. ஜ. கவை வெளியேற்றி ஏற்கெனவே அ. தி. மு. க. தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து நாங்கள் வெளியேறிவிட்டோம். அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் கூட்டணி அமைத்து 2024 பாராளுமன்றத் தேர்தலை சந்திப்போம்” என்றார்.

(ஐ)

## கோவை கார் சிலிண்டர் வெடிப்பு;

# கைதானோர் சம்பவ இடத்துக்கு அழைத்து சென்று விசாரணை!

கோவை, செப். 29

கோவை கார் சிலிண்டர் வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட இருவரை, காவலில் எடுத்த தேசிய புலனாய்வு முகமை (என். ஐ. ஏ). அதிகாரிகள் கோவைக்கு அழைத்து வந்து விசாரித்தனர்.

கோவை உக்கடத்தை அடுத்த கோட்டைமேடு சங்கமேஸ்வரர் கோயில் அருகே, கடந்தாண்டு ஒக். 23ஆம் திகதி கார் சிலிண்டர் வெடிப்பு சம்பவம் நடந்தது. இதில் காரை ஓட்டி வந்த ஜமேஷா முபின் உயிரிழந்தார். பொலிஸாரின் விசாரணையில் ஐ. எஸ். தீவிரவாத அமைப்பின் ஆதரவாளரான முபின், மக்கள் கூடும் இடத்தில் தாக்குதல் நடத்த திட்டமிட்டது தெரிய வந்தது.

பின்னர், இந்த வழக்கு தேசிய புலனாய்வு முகமைக்கு (என். ஐ. ஏ.) மாற்றம் செய்யப்பட்டது. இந்த வழக்கு தொடர்பில் 11 பேர் முதலில் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீது குற்றப்பத்திரிகை, துணை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டன.

இவ்வழக்கு தொடர்பாக, கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்களை நேற்றுமுன்தினம் சம்பவம் இடம் பெற்ற கோவைக்கும், அவர்கள் வசித்த இடத்துக்கும் அழைத்து சென்று விசாரணைகளை நடத்தினர் என்று அறிய வருகின்றது.

(ஐ)

# தேர்தல் ஒத்திவைப்பு மனித உரிமை மீறல்!

## மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 29

**“உள்ளூராட்சிச்சபை மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை மனித உரிமை மீறலாகும். எனவே, அத்தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.” - என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.**

“உரிய காலப்பகுதிக்குள் தேர்தல் நடத்தப்படுவதும், அதனை நீதியாகவும், நியாயமாகவும் நடத்துவதும் மனித உரிமையாகும். அரசமைப்பிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவது மனித உரிமை மீறலாகும். எனவே, உரிய காலப்பகுதியில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே மனித உரிமை ஆணைக்குழு இருக்கின்றது.” - என மேற்படி ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சிச் சபைத்தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேட்பு மனுக்களை இரத்துச் செய்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்ற பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு ஆலோசனைக் குழு கூட்டத்திலேயே இது தொடர்பில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

உள்ளாட்சிசபைத் தேர்தல் நடைபெறாததால், அத்தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்தவர்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர், இதனை நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே மனித உரிமை ஆணைக்குழு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, சமூக ஊடகங்கள் கண்காணிப்பு என்ற போர்வையில் கருத்து சுதந்திரத்தை ஒடுக்குவதற்கான முயற்சி இடம்பெறுமானால் அது பாரதூரமான விடயமாகும். இவ்விவகாரம் தொடர்பில் எமது பரிந்துரைகள் முன்வைக்கப்படும். - எனவும் மனித உரிமை ஆணைக்குழுவின் தவிசாளர் குறிப்பிட்டார்.

(அ)



# யாழில் நெல்விதைப்பு விழா!

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாணம் செம்மணி பிரதேசத்தில் பெரும்போக நெற் செய்கைக்கான நெல்விதைப்பு விழா நேற்று ஆரம்பமானது.

இதன்போது பெருமளவிலான விவசாயிகள் பெரும்போகத்துக்கான நெல்விதைப்பில் ஈடுபட்டதுடன், தமது வயல் நிலங்களைப் பண்படுத்துதல், வரம்பு கட்டுதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

(அ)

# ரயிலில் மோதுண்டு 4 யானைகள் மரணம்!

கொழும்பு, செப். 29

குருநாகல், அம்பன்பொல பகுதியில் ரயிலில் மோதி நான்கு யானைகள் உயிரிழந்துள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இதன் காரணமாக குறித்த மார்க்கத்தில் ரயில் சேவை தாமதமடைந்தது.

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட இரவு நேர தபால் ரயிலில் மோதியே யானைகள் உயிரிழந்துள்ளன.

(அ)

# அவுஸ்ரேலியன் தமிழ் யூனியன் அமைப்பினால் உயிரிழை அமைப்புக்கு மருத்துவ அவசர ஊர்தி!





முல்லைத்தீவு, செப். 29

அவுஸ்ரேலியன் தமிழ் யூனியன் அமைப்பினால் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் நகரில் இயங்கிவரும் உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட அமைப்புக்கான மருத்துவ அவசர ஊர்தி வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

அவுஸ்ரேலியன் தமிழ் யூனியன் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் தவராசா காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அவுஸ்ரேலியன் தமிழ் யூனியன் அமைப்பின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு மருத்துவ அவசர ஊர்தியினை உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட அமைப்பினரிடம் கையளித்தனர்.

சுமார் ஒரு கோடி முப்பது இலட்சம் ரூபா பெறுமதியான இந்த ஊர்தி கையளிக்கும் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சி.குணபாலன், முல்லைத்தீவு மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் திருமதி லிசோ கேகிதா, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி வீ.சண்முகராஜா, ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர் இ.றமேஸ், உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோர் அமைப்பின் உறுப்பினர்கள் ,அவுஸ்ரேலியன் தமிழ் யூனியன் உறுப்பினர்கள் நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

# மல்லாவியில் மகிழ்வு இல்லம்

முல்லைத்தீவு, செப். 29

முல்லைத்தீவு மாவட்டம், மல்லாவி ஒளிரும் வாழ்வு சமூக சேவை நிலையத்தின் மகிழ்வு இல்லக் கட்டடம் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது.

மாற்றுத்திறனுடையவர்களின் துயர் துடைக்கும் சமூக சேவை அமையமாக கடந்த தசாப்த காலமாக இயங்கி வரும் ஒளிரும்வாழ்வு சமூக சேவை அமையத்தின் ஓர் அங்கமாகவே குறித்த மகிழ்வு இல்லம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கட்டடத்தை உளநல வைத்திய நிபுணரும் பேராசிரியருமான டாக்டர் சிவயோகன் திறந்து வைத்தார்.



இந்நிகழ்வில் மத குருமார்கள், ஆயுள்வேத வைத்தியர் சிவரஞ்சனி சுசீந்திரன், அனிஞ்சியன்குளம் கிராம அலுவலர் துசாந்தினி, மல்லாவி வர்த்தகர்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் , பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# கஞ்சா பயிர்ச்செய்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

## ஓரிரு வாரங்களில் வர்த்தமானி வெளியாகும்

கொழும்பு, செப். 29

சுற்றுலாத்துறை சேவைக் கைத்தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கட்டுப்பாடுகளை தளர்த்துவது அத்தியாவசியமானது. இரவு நேரங்களில் சுற்றுலாப் பயணிகள் சுதந்திரமாக நடமாட இடமளிக்கவேண்டும். கஞ்சா பயிர்ச்செய்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.அதற்கான வர்த்தமானி ஓரிரு வாரங்களில் வெளியிடப்படும் என சுற்றுலாத்துறை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுற்றுலாத்துறை கைத்தொழில் மேம்பாடு ஊடாக வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறைக்கு தீர்வு காண முடியும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டு (நிறைவடைந்த ஒன்பது மாத காலப்பகுதி) சுமார் 10 இலட்சம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளார்கள்.

இந்த ஆண்டு இறுதி பகுதிக்குள் 15 இலட்சம் சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு அழைத்து வர எதிர்பார்த்துள்ளோம். அதற்கான விசேட செயற்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் மூன்று மாதகாலப்பகுதிகளில் ஐரோப்பிய நாடுகளில் இருந்து அதிகளவிலான சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தரவள்ளார்கள்.அத்துடன் மத்திய கிழக்காசிய நாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகளை அழைத்து வருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கான தேவைகளை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.பிரதான சுற்றுலா மையங்களான நுவரெலியா, எல்ல, காலி, கொழும்பு ஆகிய பகுதிகளில் சுற்றுலா பயணிகள் இரவு நேரங்களில் சுதந்திரமாக நடமாடுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

சுற்றுலாத்துறை சேவைக் கைத்தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கட்டுப்பாடுகளை தளர்த்துவது அத்தியாவசியமானதாக காணப்படுகிறது. நாட்டுக்கு அதிக வருமானத்தை ஈட்டித் தரும் வகையில் கஞ்சா பயிர்ச்செய்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.அதற்கான வர்த்தமானி ஓரிரு வாரங்களில் வெளியிடப்படும்.

கஞ்சா பயிர்ச்செய்கை ஊடாக ரூபாவை திரட்டுவது நோக்கமல்ல, நாட்டுக்கு அதிகளவான டொலரை ஈட்டிக் கொள்ள முடியும். கஞ்சா பயிர்ச்செய்கைக்காக விசேட அதிகார சபை உருவாக்கப்பட்டு கண்காணிக்கப்படும்-என்றார்.

(அ)

# யுத்த காலத்தின்போதும் கனடா பயங்கரவாதத்துக்கு உதவியது!

## மொட்டு கட்சி எம்.பி. சீற்றம்

கொழும்பு, செப். 29

**“கனடா தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வெளியிட்ட கருத்து உண்மையே. அரசின் நிலைப்பாட்டையே அவர் பிரதிபலித்துள்ளார்.” - என்று சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.**

**இலங்கையில் போர் இடம்பெற்றபோது பயங்கரவாதத்துக்கு உதவும் வகையிலேயே கனடா செயற்பட்டது எனவும் அது கூறியுள்ளது.**

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன மேற்கண்டவாறு கூறினார்.

“இலங்கையில் போர் இடம்பெற்றபோது பயங்கரவாதத்துக்கு உதவும் வகையிலேயே கனடா செயற்பட்டது. இன்றும் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் வகையிலேயே அந்நாடு செயற்படுகின்றது.

இலங்கை இறைமையுள்ள - சுயாதீன நாடு. எனவே, தேவையற்ற தலையீடுகளை நாம் அனுமதிக்கபோவதில்லை.

இந்தியா பக்கமோ, கனடா பக்கமோ அல்ல. இலங்கை அணிசேரா கொள்கையை பின்பற்றும் நாடு. ஆனால் கனடா விவகாரத்தில் வெளிவிவகார அமைச்சர் உண்மையையே வெளிப்படுத்தியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சரின் அறிவிப்பு என்பது அரசின் அறிவிப்பாகவே கருதப்படும்.” - என்றார்.

“சர்வதேச நாணய நிதியத்தின் 2ஆம் கட்ட கடன் விரைவில் கிடைக்கும். இது தொடர்பில் வீண் அச்சம் கொள்ள வேண்டியதில்லை.” - என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“அலுவலக மட்டத்திலான பேச்சுகளில் துரித இணக்கப்பாட்டை எட்டுவதற்கான பேச்சுகள் தொடரும் என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். இந்த கலந்துரையாடல்களின் பின்னர் எமக்கு 2ஆம் கட்ட கடன் உதவி கிடைக்கும். எனவே, இது விடயத்தில் வீண் அச்சம் கொள்ள வேண்டியதில்லை.

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்தீரப்படுத்தவேண்டுமானால் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது. அந்த இலக்குகளை நாம் அடைய வேண்டும்.

அதேவேளை, இந்த அரசு சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கு ஏற்ப ஆடுவதாக சிலர் கூறினர். அவர்களுக்கும் தற்போது தெளிவாக பதில் கிடைத்திருக்கும் என நம்புகின்றோம். -என்றார்.

(அ)

# எவ்வித ஜனநாயகமும் கட்சிகளிடம் இல்லை!

## மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 29

கட்சிகளில் எவ்வித ஜனநாயகமும் இல்லை. காலி வீதியில் இருந்து பத்தரமுல்லை வரையில் இருக்கும் காரியாலயங்களில் மட்டுமே இலங்கையில் ஜனநாயகம் இருக்கின்றது என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் முன்வைக்கும் கொள்கைப் பிரசாரங்களை யாதார்த்தமானவையாக மாற்றுவதற்காக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பவ்ரல் அமைப்பின் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய,

எதிர்காலக் கொள்கைப் பிரசாங்கள் குறித்து சுருக்கமாக கூறினால் திருமண தரகர்கள் போன்று இருபுறமும் பேசும் கதை போன்று இருக்கின்றது.

அதைத் தருகின்றோம் இதை தருகின்றோம் என்று கூறுவார்கள். அதில் அதிகமான விடயங்கள் செய்ய முடியாதவை.

கட்சிகளில் எவ்வித ஜனநாயகமும் இல்லை. காலி வீதியில் இருந்து பத்தரமுல்லை வரையில் இருக்கும் காரியாலயங்களில் மட்டுமே இலங்கையில் ஜனநாயகம் இருக்கின்றது.

அரசியல் கட்சியில் தங்களுக்கு ஒரு அசாதாரணம் நிலவும்போது அனைத்து விடயங்களையும் வெளியில் கூறி விடுவார்கள்-என்றார்.

(அ)

# பனைசார் பொருள்கள் உற்பத்தி கண்காட்சி நேற்று வவுனியாவில்





வவுனியா, செப். 29

பனைசார் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

அண்மையில் பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையோடு வவுனியாவில் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பனைசார் உற்பத்திப் பொருட்கள் தொடர்பான பயிற்சிநெறி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த பயிற்சிநெறியையடுத்து, நேற்று நெளுக்குளத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில் கண்காட்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிருஷாந்த பத்திராஜ கலந்துகொண்டார். இதன்போது மரநடுகை உள்ளிட்ட பல நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனு செல்லுபடியாகும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு கூறுகிறது

கொழும்பு, செப். 29

2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இன்னும் செல்லுபடியாகும் என்றும், அவை பாராளுமன்றத்தில் ஒரு சட்டத்தின் மூலம் மட்டுமே இரத்து செய்யப்பட முடியும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஆலோசனைக் குழு, உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை இரத்து செய்ய ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியிருந்தது.

வேட்புமனுக்களை இரத்துச் செய்ய ஆலோசனைக் குழுவின் தீர்மானம் எதையும் செய்யாது என்றும் வேட்பு மனுக்களை

ஸ்ரீ லංකා මැතිවරණ කොමිෂන් සභාව
இலங்கை தேர்தல் ஆணைக்குழு
Election Commission of Sri Lanka

இரத்து செய்ய வேண்டுமானால், அதை பாராளுமன்ற சட்டத்தின் மூலம் மட்டுமே செய்ய முடியும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடத்த தீர்மானிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு மற்றும் திறைசேரியால் தேவையான நிதி விடுவிக்கப்படாத நிலையில் ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அந்த நேரத்திலும் நிதி வெளியிடப்படாததால், மீண்டும் தேர்தலை காலவரையின்றி தேர்தல்கள் ஆணைக்குழு ஒத்திவைத்ததால், வேட்புமனு தாக்கல் செய்த அரச அதிகாரிகள் பலர் பல்வேறு சிரமங்களை சந்திக்க நேரிட்டது.

எவ்வாறாயினும் வேட்புமனுக்களை இரத்து செய்வதால் சுமார் 1000 கோடி இழப்பு ஏற்படும் என்றும், மக்களின் வாக்குரிமையை பறிக்கும் செயல் என்றும் எதிர்க்கட்சி மற்றும் சிவில் அமைப்புகளிடமிருந்து விமர்சனங்கள் எழுந்த நிலையில் வேட்புமனுக்களை இரத்து செய்ய ஆலோசனைக் குழு முடிவு செய்திருந்தது.

(அ)

# விமான சேவைகள் தாமதம்

கொழும்பு, செப். 29

சிறிலங்கன் விமான நிறுவனத்திற்கு சொந்தமான 2 விமானப் பயணங்கள் நேற்று தாமதமாகின.

அத்துடன், மற்றுமொரு விமானப் பயணத்தை இரத்துச் செய்யவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷ் தலைநகரான டாக்கா நோக்கி பயணிக்கவிருந்த யு.எல்.189 இலக்க விமானம், தொழில்நுட்பக் கோளாறுக்குள்ளானமையினால் பயணத்தை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டதாக சிறிலங்கன் விமான நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

குறித்த விமானப் பயணம் தாமதமடைந்தமையினால், பாகிஸ்தான் நோக்கி பயணிக்கவிருந்த யு.எல். 153 இலக்க விமானப் பயணத்தை இரத்துச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, இந்தியாவின் சென்னை நோக்கி பயணித்த யு.எல். 141 இலக்க விமானத்தை தரையிறக்குவதில் நேற்றுக் காலை தாமதம் ஏற்பட்டது.

சென்னை விமான நிலையத்தின் ஓடுபாதையில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டதாக சிறிலங்கன் விமான நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

(அ)

# யாழில் 'பிக் மீ'ஐ தடுக்க முடியாது ஓட்டோக்களுக்கு மீற்றர் கட்டாயம்!

## மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 29

**யாழ். மாவட்டத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்கள் " கட்டண மீற்றர்" பொருத்துவது கட்டாயமானது. அதேவேளை, முறையான அனுமதி பெற்று நடத்தப்படும் எந்தப் பயணிகள் சேவையையும் தடுக்க முடியாது என்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.**

**யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன் தினம் மாலை நடந்த விசேட கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.**

கூட்டத்தில் கலந்துகொண்ட ஓட்டோச் சாரதிகள் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் தற்போது சேவையில் ஈடுபடும் 'பிக் மீ' தனியார் ஓட்டோச் சேவை தொடர்பாகப் பிரஸ்தாபித்தனர்.

அந்தத் தனியார் நிறுவனத்தில் பதிவு செய்து சேவையில் ஈடுபடும் ஓட்டோக்கள் குறைந்த கட்டணத்தை வசூலிக்கின்றன என்றும், அதனால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்றும் தெரிவித்தனர்.

ஓட்டோக்களுக்கு "மீற்றர்" பொருத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டு பணம் செலவிட்டு தாங்கள் மீற்றர் பொருத்திவரும் நிலையில், தனியார் நிறுவனத்தின் சேவை தங்களுக்கு வருமான இழப்பை ஏற்படுத்துகின்றது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அவர்களுக்குப் பதிலளித்த யாழ். மாவட்ட செயலர், பயணிகள் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்கள் கட்டண மீற்றர் பொருத்த வேண்டும் என்பது சட்டம். அதில் எந்த மாற்றமும் செய்யமுடியாது. அதேவேளை, உரிய அனுமதி பெற்று மேற்கொள்ளப்படும் தனியார் நிறுவன பயணிகள் சேவையை தடுக்கும் அதிகாரம் எனக்கு இல்லை என்று பதிலளித்தார்.

கட்டண மீற்றர் பொருத்தப்பட்டு சேவையில் ஈடுபடும் ஓட்டோக்கள் தொடர்பிலும் பொது மக்கள் முறைப்பாடுகளை முன்வைக்கின்றனர். மீற்றர் கட்டணத்துக்கு அதிகமாகச் சிலரால் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது என்று கூறப்படுகின்றது. ஆயினும், தனியார் ஓட்டோச் சேவை தொடர்பாக இதுவரை எந்த முறைப்பாடுகளும் எமக்குக் கிடைக்கவில்லை என்றும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் சுட்டிக்காட்டினார். (அ)

# ஆண்டு தோறும் 900 குழந்தைகளுக்கு இலங்கையில் புற்றுநோய் பாதிப்புநிலை!

கொழும்பு, செப். 29

ஆண்டுதோறும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சுமார் 900 குழந்தைகள் கண்டறியப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

பிறந்தது முதல் 19 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு ஏற்படும் புற்றுநோய் குழந்தை புற்றுநோய் என அடையாளப்படுத்தப்படுகின்றது எனவும், அந்த வகையில் புதிதாக 471 ஆண் பிள்ளைகளும் 454 பெண் பிள்ளைகளும் குழந்தை புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் சமூக வைத்திய நிபுணர் சுராஜ் பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன் குழந்தை புற்றுநோயாளர்கள் தொடர்பில் ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் மாதம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அடுத்த வாரம் முதல் பெரும்போகத்துக்கு நீர்

கொழும்பு, செப். 29

பெரும்போகத்திற்கான நீரை எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் திறந்துவிடத் தீர்மானித்துள்ளதாக மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

முதலில் கலா வாவி ஊடாக யோத கால்வாய்க்கு நீர் திறந்துவிடப்படும் என மகாவலி அதிகார சபையின் பிரதி பணிப்பாளர் நாயகம் நிலந்த தனபால தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் மகாஇலுப்பல்லம, கட்டியாவ, கலா வாவி, இபலோகம ஆகிய பகுதிகளுக்கு நீர் விநியோகிக்கப்படவுள்ளது.

அத்துடன், நவம்பர் முதலாம் திகதி முதல் மகாவலி அதிகாரசபைக்கு உட்பட்ட அனைத்து பிரதேசங்களுக்கும் நீர் திறந்துவிடப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# 20 வருடங்களில் வாகன விபத்தால் 60,000 பேர் உயிரிழக்கும் சாத்தியம்!

கொழும்பு, செப். 29

எதிர்வரும் 20 வருடங்களில் வாகன விபத்துக்களால் 60 ஆயிரம் பேர் வரை உயிரிழக்கும் சாத்தியம் உள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பேராசிரியர் வைத்தியர் சமன் தர்மரத்ன தெரிவித்தார்.

வீதி பாதுகாப்பு தொடர்பில் இடம்பெற்ற பயிற்சி பட்டறை ஒன்றில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

கடந்த சில வருடங்களாக இடம்பெற்ற வாகன விபத்துக்களுடன் ஒப்பிட்டதன் அடிப்படையிலேயே இந்த தகவல் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் எதிர்வரும் 20 வருடங்களின் வாகன விபத்துக்கள் காரணமாக 40 ஆயிரம் பேர் அங்கவீனர்களாகுவதற்கும் சாத்தியம் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், இந்த விபத்துக்கள் காரணமாக அரசாங்கத்திற்கு 200 பில்லியன் ரூபாய் செலவினம் ஏற்படுவதற்கு சாத்தியம் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாகன விபத்துக்கள் தொடர்பில் கடமையாற்றிய மூன்று ஜனாதிபதிகளிடம் தாம் எடுத்துரைத்துள்ளபோதிலும் எவரும் கவனத்தில் கொள்ளவில்லை எனவும் பேராதனை பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தின் பேராசிரியர் வைத்தியர் சமன் தர்மரத்ன தெரிவித்தார். (அ)

# எனது கொள்கைகள் இல்லாத அனைவரும் எனது எதிரிகளே!

## கூறுகின்றார் மைத்திரிபால

கொழும்பு, செப். 29

எனது கொள்கைகள் இல்லாத அனைவரும் எனது எதிரிகள் என சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு கங்காராமய விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோருக்கு எனது கொள்கைகள் இல்லாத காரணத்தினால் நான் அவர்களுக்குப் பொது எதிரியாகியுள்ளேன் என அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் வின



வியபோது, முன்னாள் ஜனாதிபதியை சந்தித்து தேநீர் அருந்தியதாக அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், மறைந்த பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் 64 ஆவது நினைவேந்தலில் செவ்வாய்க்கிழமை இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளும் ஒருவரையொருவர் சந்தித்தனர்.

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் என்ற வகையில் நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம். எமக்கு எந்தப் பிரச்னையும் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தொடர்பில் வினவியபோது, அவருக்கு எதிராக சுதந்திரக் கட்சியின் ஒழுக்காற்று சபையினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி சிறிசேன தெரிவித்தார்.

"நாங்கள் நீதிமன்ற வழக்குகளை தாக்கல் செய்யவில்லை, ஆனால் தயாசிறி ஜயசேகர எமக்கு எதிராக நீதிமன்றம் சென்றவர். எனவே அவர் வழக்கை வாபஸ் பெற்று எம்முடன் பேச முடியும். குற்றப்பத்திரிகையில் உள்ள உண்மைகளை அவர் தீர்த்து வைத்து மீண்டும் எம்முடன் இணைந்து செயற்பட ஆரம்பிக்க முடியும். அதற்கு எந்த தடைகளும் இல்லை" என முன்னாள் ஜனாதிபதி கூறினார். (அ)

# கொழும்பில் தட்டம்மை தீவிரம் 52 நோயாளர்கள் அடையாளம்!

கொழும்பு, செப். 29

கொழும்பில் தற்போது வரை 52 தட்டம்மை நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், அவர்களுக்கு சிகிச்சை, மற்றும் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் கொழும்பு மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் சந்தன கஜநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

தட்டம்மை நோயானது தற்போது நாட்டில் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது என்று எம்மால் உறுதியாகக் கூற முடியாது.இது தொடர்பாக நாம் மேலும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து துறைகளை பாதுகாப்பதில் அர்ப்பணிப்பு

## அமெரிக்க தூதுவர் கூறுகிறார்

கொழும்பு, செப். 29

இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகளை பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை நேற்று முன் தினம் சந்தித்ததாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், ருவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வர்த்தகம் மற்றும் தனியார் துறை சார்ந்த வளர்ச்சியின் இன்றியமையாத கூறுகளான இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறையின் அபிவிருத்திகள் குறித்து இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக தூதுவர் கூறியுள்ளார்.

இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகளில் வெளிப்படையான வளர்ச்சியை எளிதாக்குவதற்கும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அமெரிக்கா அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜூலி சங் குறிப்பிட்டுள்ளார். (அ)

# விபத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, செப். 29

மீட்டியாகொட, கஹாவ, கொடகம ரயில் கடவையில் ரயிலுடன் பாரவூர்தி ஒன்று மோதுண்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பாரவூர்தியில் பயணித்த 40 வயதுடைய நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த நபர் பத்தேகம பகுதியைச் சேர்ந்தவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் விபத்தில் படுகாயமடைந்த பாரவூர்தியின் சாரதி பலபிட்டி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# பிரதேச சபை ஊழியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

## ஆளுநர் செந்தில் தொண்டமான் கோரிக்கை

**திருமலை, செப். 29**

**பிரதமர் தினேஸ் குணவர்தனவுக்கும் மாகாண ஆளுநர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை அலரிமாளிகையில் இடம்பெற்றது.**



இச்சந்திப்பில் அனைத்து மாகாணங்களை சேர்ந்த ஆளுநர்கள் கலந்து கொண்டு, தங்களுடைய மாகாணங்களில் காணப்படும் பிரச்னைகள் குறித்து பிரதமர் தினேஸ் குணவர்தனவின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

இந்த சந்திப்பில் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் பிரச்னைகள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதமரிடம் எடுத்துரைத்தார்.

கிழக்கு மாகாணத்தில் பல வருட காலமாக பிரதேச சபை ஊழியர்களுக்கு நிரந்த நியமனங்கள் வழங்கப்படாத நிலையில் கணிசமானவர்கள் பணிபுரிகின்றனர் எனவும், இவர்களை நிரந்தரமாக்குவதற்கான வயதையும் தாண்டிய நிலையில் பலர் உள்ளனர் எனவும், நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் பிரதரிடம் ஆளுநர் வலியுறுத்தினார்.

ஆளுநரின் கோரிக்கையை ஏற்ற பிரதமர்,பிரதேச சபை ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க எதிர்வரும் வாரங்களில் அமைச்சரவை அங்கீகாரம் பெற தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்தார்.

(அ)



# மீலாத் விழா அக்கரைப்பற்றில்

அக்கரைப்பற்று, செப். 29

இஸ்லாத்தின் இறுதித்தூதர் முகம்மது நபி ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் பிறந்த தினத்தினையொட்டி அக்கரைப்பற்று ஏஸ் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மீலாநுன் நபி தின விழா நேற்று அக்கரைப்பற்று எப்.என்.வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

கழகத்தின் தலைவர் பி.ரி. செய்னுலாப்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது அல்-குர்ஆன் தமாம் வைபவம் இடம்பெற்றதுடன், விஷேட சமைய நிகழ்களும் அன்னதான வைபவமும் இடம் பெற்றது.

இதேவேளை, இந்நிகழ்வின் போது நபி முகம்மது (ஸல்) அவர்களின் முன்மாதிரி பற்றியும் சமூக ஒற்றுமைக்கான இறைத் தூதரின் வாழ்வியல் முறை பற்றியும் விஷேட மார்க்க சொற்பொழிவு இடம்பெற்றுடன், உலக மக்கள் நிம்மதியுடன் வாழ்வதற்காக விஷேட துஆப் பிராந்தனையும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மீலாத் தின ஊர்வலம்



அம்பாறை, செப். 29

சாய்ந்தமருது மஸ்ஜிதுல் அக்பர் ஜூம்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மீலாத் தின ஊர்வலம் சாய்ந்தமருது பிரதேசத்தின் அனைத்து வீதிகள் வழியாகவும் வலம் வந்து மீலாத் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இதன்போது சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜூம்ஆப் பெரிய பள்ளிவாசல் முன்னால் அமைந்துள்ள அஸ்கோலியா அப்பாவின் சியாரத்தில் மஸ்ஜிதுல் அக்பர் ஜூம்ஆப் பள்ளிவாசலின் பேஸ் இமாம் எஸ்.எச்.எம். இம்தியாஸ் மௌலவியால் துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# மீலாத் தினத்தை முன்னிட்டு பள்ளிவாசலில் மரம் நாட்டல்

அம்பாறை, செப். 29

சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜூம்ஆ பெரிய பள்ளிவாசலினால் மீலாத் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட மரநடுகை நிகழ்வு சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜூம்ஆப் பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.



சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜூம்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மரத்தை நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றிம்ஸான், சாய்ந்தமருது பிரதேச செய லக முஸ்லிம் கலாசார உத்தியோகத்தர் ஏ.எம். பர்ஹான், ஜூம்ஆப் பள்ளிவாசலின் செயலாளர் ஐ.எல்.எம்.மன்சூர், உப செயலாளர் ஏ. உதுமாலெப்பை, மரைக்காயர்களான ஏ.ஏ.மஜீட், ஏ.சீ. முஹம்மட், எம்.எஸ்.றௌசூக், யூ.எல்.ஏ. வாஹிது, ஜூம்ஆப் பெரிய பள்ளிவாசலின் பேஸ் இமாம் எம்.ஐ. ஆதம்பாவா (ரஷாதி), ஜூம்ஆப் பள்ளிவாசலின் நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். றசீது, அதன் கணக்காய்வாளர் யூ.எல். அபுல் ஹசன் உட்பட பலரும் கலந்து கொண்டு மரங்களை நாட்டி வைத்தனர்.

இதன்போது சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜூம்ஆப் பெரிய பள்ளிவாசலின் இமாம் எம்.ஐ. ஆதம்பாவா ரஷாதியினால் துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வாழைச்சேனையில் மீனவர் ஆர்ப்பாட்டம்







மட்டக்களப்பு, செப். 29

வாழைச்சேனை மீன்பிடித் துறைமுக பகுதியில் மீன் பிடித் தொழில் மேற்கொள்ளும் படகு உரிமையாளர்கள் தொழில் செய்வதில் ஏற்பட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரி எதிர்ப்பு போராட்டம் வியாழக்கிழமை துறைமுகம் முன்பாக நடத்தப்பட்டது.

வாழைச்சேனை மீன்பிடித் துறைமுக நிருவாகம் மற்றும் மீன் பிடித் திணைக்களம் என்பவற்றுக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

வெசல் மொனிட்டரிங் சிஸ்டம் கட்டணம் தொடர்பாகவும், ஐஸ் கட்டியின் விலை அதிகரிப்பு, தரமான வலை கிடைப்பதில்லை, துறைமுக இடம் பற்றாக்குறையாகவுள்ளதை நிவர்த்தி செய்து தருமாறு கோரியும் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வெசல் மொனிட்டரிங் சிஸ்டம் என்ற கருவியை அவுஸ்திரலிய அரசாங்கம் கடத்தல்களை கட்டுப்படுத்தும் திட்டத்தில் படகுகளை கண்காணிக்க இலவசமாக வழங்கியது. இந்த கருவிகளுக்கு மாதாந்தம் ஆறாயிரம் ரூபா அறவிடுவதும் அப்பணத்தினை செலுத்தாத பட்சத்தில் படகு தொழிலுக்கு செல்வதற்கான அனுமதியை மறுப்பதும் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்ட காரர்கள் தெரிவித்தனர்.

(அ)

# உஸ்பெகிஸ்தான் விமான நிலையம் அருகே சக்திமிக்க குண்டுவெடிப்பு!

## ஒருவர் உயிரிழப்பு, 162 பேர் காயம்

ராஸ்கென்ற், செப். 29

**உஸ்பெகிஸ்தானின் தலைநகரான தாஷ்கண்ட்டில் உள்ள விமான நிலையம் அருகே உள்ள களஞ்சியசாலையில் நேற்று அதிகாலை சக்தி வாய்ந்த வெடிப்புச் சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது.**



இச்சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் 162 பேர் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இக்குண்டு வெடிப்பின் போது அருகே உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும் தீ பரவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இக்குண்டு வெடிப்புக்கான காரணம் குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ)



# தாய்வானின் நீர்மூழ்கி அறிமுகம்

தைபே, செப். 29

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் நீர்மூழ்கிக் கப்பலை தாய்வான் நேற்று அறிமுகப்படுத்தியுள்ளது.

சீனாவின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பை பெறும் வகையில் குறித்த நீர்மூழ்கிக் கப்பல் அறிமுகப்படுத்தப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கிக் கப்பலுக்கான யோசனை சாத்தியமற்ற பணியாகக் ஆரம்பத்தில் கருதப்பட்டதாக தாய்வான் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எரிபொருளில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல் பல சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் வருட இறுதியில் கடற்படைக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# புர்கினா பாசோவில் மற்றொரு இராணுவப் புரட்சி முறியடிப்பு!



புர்கினா பாசோவில் சதிப்புரட்சி முயற்சியை முறியடித்துள்ளதாக இராணுவ அரசாங்கம் கூறியது.

அரசு தொலைக்காட்சியில் வாசிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, உளவுத்துறை மற்றும் பாதுகாப்பு சேவைகளால் செப்ரெம்பர் 26 அன்று நிரூபிக்கப்பட்ட சதி முயற்சி முறியடிக்கப்பட்டது என்று அரசாங்கம் கூறியது.

தற்போது, இந்த ஸ்திரமின்மை முயற்சியில் அதிகாரிகள் மற்றும் பிற கூறப்படும் பங்கேற்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர், மற்றவர்கள் தீவிரமாக தேடப்படுகிறார்கள் என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் குடியரசின் நிறுவனங்களைத் தாக்கி நாட்டை குழப்பத்தில் ஆழ்த்தும் தீய எண்ணம் கொண்டவர்கள் என்றும் அரசாங்கம் கூறியது.

ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியின் பின்னணியில் உள்ளவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

கடந்த ஆண்டு செப்டம்பரில், கப்டன் இப்ராஹிம் ட்ராரே, புர்கினா பாசோவின் ஆட்சியை கைப்பற்றினார். அதற்கு 8 மாதங்களின் முன்னரே, இராணுவம் ஆட்சியை கைப்பற்றியிருந்தது.

நாட்டில் தீவிரமடையும் ஜிஹாதி கிளர்ச்சியைத் தடுக்கத் தவறியதில் ஏற்பட்ட அதிருப்தியாலேயே, அடுத்தடுத்த இரண்டு இராணுவ சதிப்புரட்சிகளும் நிகழ்ந்தன. (அ)

# காலநிலை மாற்றத்தால் அமேசன் காடுகளில் வறட்சி

ரியோடி ஜெனிரோ, செப். 29

காலநிலை மாற்றம் காரணமாக அமேசன் காடுகளில் வறட்சி ஏற்படும் அபாயம் நிலவுகிறது.

உலகின் நுரையீரலாக அமேசன் காடுகள் செயல்படுகின்றன. மக்கள் வெளியிடும் கரியமில வாயுக்கள் உள்ளிட்ட நச்சுகளை சுத்திகரித்து ஒட்சிசன் உயிர் காற்றை உற்பத்தி செய்து வருகிறது. அமேசன் மலைக்காடுகளின் 60 சதவீதப்பகுதி தென்னமெரிக்கா நாடான பிரேசிலில் உள்ளது.

இந்தநிலையில் காலநிலை மாற்றம் காரணமாக அமேசனில் கடந்த 2019ஆம் ஆண்டு முதல் காட்டுத்தீ பரவியது. கட்டுங்கடங்காத காட்டுத்தீயால் காடுகள் பலத்த சேதத்துக்கு உள்ளாகின. மேலும் அவ்வப்போது பெய்யும் மழையும் பொய்த்து போனது. அங்கு உள்ள அணைகள் உள்ளிட்ட நீர்தேக்க நிலையங்களின் கொள்ளளவு குறைந்து வருகிறது. எனவே வரும் காலங்களில் அங்கு வறட்சி ஏற்படும் அபாயம் நிலவுகிறது.

பூர்வ பழங்குடிகள் உள்பட 5 இலட்சத்துக்கும் அதிகமான பிரேசில் மக்கள் வறட்சியால் பாதிக்கப்படுவர் என பிரேசில் நாட்டின் வானிலை ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# அமெரிக்கா, பிரிட்டனின் உதவியுடனேயே கிரிமியா கடற்படை தளம் தாக்கப்பட்டது!

மொஸ்கோ, செப். 29

கடந்த வாரம் கிரிமியாவில் உள்ள ரஷ்ய கருங்கடல் கடற்படையின் தலைமையகத்தில் முன்னோடியில்லாத வகையில் உக்ரைன் நடத்திய தாக்குதலுக்கு, வாஷிங்டனும் லண்டனும் உதவியதாக ரஷ்யா கூறியது.

“மேற்கத்திய உளவுத்துறை சொத்துக்கள், நேட்டோ செயற்கைக்கோள் கருவிகள் மற்றும் உளவு விமானங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி தாக்குதல் முன்கூட்டியே திட்டமிடப்பட்டது என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை” என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா கூறினார்.

ஏவுகணைத் தாக்குதல் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் புலனாய்வு சேவைகளுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பில் நடத்தப்பட்டது என்று அவர் மேலும் கூறினார்.



இணைக்கப்பட்ட கிரிமியாவில் உள்ள ரஷ்யாவின் கருங்கடல் கடற்படையின் தலைமையகத்தை வெள்ளிக்கிழமை தாக்கிய ஏவுகணைத் தாக்குதலுக்கு உக்ரைன் பொறுப்பேற்றது.

இந்த தாக்குதலில் ஒரு ரஷ்ய படைவீரரை காணவில்லை என்று ரஷ்யா கூறியது. அதே நேரத்தில் கடற்படை தளபதி விக்டர் சோகோலோவ் உட்பட 34 அதிகாரிகள் கொல்லப்பட்டதாக உக்ரைன் கூறியது.

ஆனால் உக்ரைன் கொல்லப்பட்டதாக கூறிய கடற்படை தளபதி உயிருடனுள்ள காட்சிகளை ரஷ்யா வெளியிட்டது

பெப்ரவரி 2022 இல் உக்ரைன்- ரஷ்யா யுத்தம் வெடித்ததை தொடர்ந்து, மேற்கத்திய சக்திகள் மாஸ்கோவிற்கு எதிராக நிதி மற்றும் இராணுவ ஆதரவை உக்ரைனுக்கு வழங்கி வருகின்றன. (அ)

# ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் ஐ.எஸ்.ஐ. அமைப்புக்கு தொடர்பு?

புதுடில்லி, செப். 29

கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் ராஜதந்திர பிரச்னை உருவாக காரணமான காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. அமைப்புக்கு தொடர்பு இருப்பதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நிஜ்ஜாரின் கொலைக்கு பின்னர் இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையில் ராஜதந்திர பிரச்னைகளை ஏற்படுத்தும் சதித் திட்டத்தின் ஒரு பகுதியாக இது இருக்கலாம் என சந்தேகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதேவேளை பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. அண்மைய காலமாக கனடா நோக்கி தனது பார்வை திருப்பி



யுள்ளது.

அண்மையில் அந்நாட்டிலும் சில பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். தம்முடன் ஒத்துழைப்பு வழங்குமாறு ஹர்தீப் சிங் நிஜ்ஜாருக்கு பாகிஸ்தான் உளவு அமைப்பு அழுத்தங்களை கொடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

எனினும் அதற்கு இணங்காது அவர் காலிஸ்தான் பிரிவினை வாதம் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளார். இதன் காரணமாக அவரை ஐ.எஸ்.ஐ கொலை செய்திருக்கலாம் என சந்தேகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (அ)

# இலங்கையில் வேலைக்குச் செல்லும் பெண்களில் அதிகளவானோருக்கு புற்றுநோய் பாதிப்பு அபாயம்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, செப். 29

**வேலைக்கு செல்லும் பெண்களில் அதிகளவானோர் புற்றுநோய் பாதிப்பை எதிர்கொள்ளும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.**

**கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட தேசிய புற்றுநோய் ஒழிப்பு திட்டத்தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் இஷானி பெர்னான்டோ இதனைக் குறிப்பிட்டார்.**

45 முதல் 65 வயதுக்கு இடைப்பட்ட வேலைக்கு செல்லும் பெண்களுக்கே புற்றுநோய் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது எனவும் அவர் கூறினார்.

வேலையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கான பரிசோதனைகள் மிகக் குறைந்த அளவிலேயே இருக்கின்றமை இதற்கான காரணம் என அவர் சுட்டிக்காட்டினார்.

பதிவாகின்ற புற்றுநோயாளர்களில் 26 சதவீதமானோர் மார்பக புற்றுநோய்க்கே இலக்காகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் 2020ஆம் ஆண்டு 2.2 மில்லியன் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் அடையாளம் காணப்பட்டதுடன், அவர்களில் 6,85,000 பேர் அந்த ஆண்டிலேயே உயிரிழந்துள்ளனர்.

இலங்கையில் 2020ம் ஆண்டாகும் போது 37,648 புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன், அவர்களில் 15,599 பேர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கையில் புற்றுநோயாளர்கள் அதிகரித்துள்ளமை குறித்து தேசிய புற்றுநோய் ஒழிப்பு திட்டத்தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் இஷானி பெர்னான்டோ கருத்து வெளியிட்டார்.

“இலங்கையில் ஒரு லட்சம் பேரில் புதிதாக 27.3 பேருக்கு புற்றுநோய் உறுதிப்படுத்தப்படுகின்ற நிலையில், அவர்களில் சுமார் 11.4 வீதமானோர் உயிரிழக்கின்றனர். 2020ஆம் ஆண்டில் மாத்திரம் 5329 புதிய புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அதில் ஆண்களுக்கு மத்தியில் காணப்படும் மார்பக புற்றுநோய் 147 ஆகும். இலங்கையில் 1985ஆம் ஆண்டு ஒரு லட்சத்திற்கு 9.4ஆக காணப்பட்ட மார்பக புற்றுநோய், தற்போது ஒரு லட்சத்திற்கு 38.8 ஆக அதிகரித்துள்ளது. மார்பக புற்றுநோய் அதிகரித்துள்ளது. முதலிலேயே அடையாளம் கண்டு, சிகிச்சை பெறுவதே சிறந்தது.” என அவர் குறிப்பிட்டார். (அ)

# கனடாவுக்கு பாடம் புகட்டியுள்ள மோடி முதுகெலும்புள்ள தலைவர்

## மொட்டு கட்சி புகழாரம்



கொழும்பு, செப். 29

கனடாவுக்கு எதிராக முதுகெலும்புடன் இந்திய பிரதமர் இன்று எடுத்த முடிவுபோல் அன்று இலங்கையும் எடுத்திருக்க வேண்டும் - என்று பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

எவ்வித ஆதாரமும் இன்றி மஹிந்த மற்றும் சில படையினரை கனடா போர்க்குற்றவாளிகளாக அறிவித்தது. இதற்கு தூதுவரை அழைத்து இலங்கை தரப்பில் ஆட்சேபனை மட்டுமே தெரிவிக்கப்பட்டது.

இந்தியாமீது குற்றஞ்சாட்டிய கனடாவுக்கு எதிராக அந்நாடு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. கனடா அதிகாரி வெளியேற்றப்பட்டுள்ளார். பிரதமர் மோடி முதுகெலும்புடன் செயற்பட்டுள்ளார்.

எமது நாட்டு வெளிவிவகார அமைச்சின் கருத்து சரியானது, அது அரசின் நிலைப்பாடு. இந்தியா இன்று எடுத்த நடவடிக்கையை இலங்கை அன்று எடுத்திருக்க வேண்டும். இலங்கை சிறிய நாடாக இருந்தாலும் சுயாதீன நாடாகும். எனவே, உள்விவகாரங்களில் தலையீடுகள் இடம்பெறக்கூடாது-என்றார். (அ)

# இருதய நோய் உயிரிழப்பு இலங்கையில் அதிகரிப்பு!

கொழும்பு, செப். 29

இதய நோய்களினால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய்களுக்கான பணியகத்தின் சமூக வைத்திய நிபுணர் ஷெரீன் பாலசிங்கம் தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டில் அரசாங்க வைத்தியசாலைகளில் 52 வீத மரணங்கள் மாரடைப்பால் ஏற்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சமூக வைத்திய நிபுணர் ஷெரீன் பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“2021ஆம் ஆண்டில், அரசாங்க வைத்தியசாலைகளில் 18-28 மற்றும் 29-39 வயதுக்குட்பட்ட ஆண்களும் பெண்களும் இருதய நோயால் பாதிக்கப்பட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் பலர் உயிரிழந்துள்ளனர். இது மிகவும் பாரிய பிரச்னையாகும்.”-என்றார் அவர்.

இதேவேளை, பொதுவான நோய் நிலைமைகளுக்கான மருந்துகளை பெறும் நடைமுறையின் ஊடாக மருந்துகளைப் பெறுவதில் பல குறைபாடுகள் இருப்பதாக சுகாதார வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் கூறினார். (அ)

# பீடி உற்பத்தியாளரை கடத்திக் கப்பம் பெற்ற கலால் திணைக்கள அலுவலர்கள் பணி நீக்கம்

கொழும்பு, செப். 29

வலஸ்முல்லையில் பீடி உற்பத்தி செய்த நபரை கடத்திச் சென்று தாக்கி கப்பம் பெற்ற சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட தங்காலை கலால் பிரிவு பொறுப்பதிகாரி உட்பட 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் இரண்டு கலால் உத்தியோகத்தர்கள், கலால் உத்தியோகத்தரான சாரதி மற்றும் இராணுவ சார்ஜன்ட் ஒருவரும் உள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் தங்காலை பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வலஸ்முல்ல பீடி உற்பத்தியாளரின் உரிமம் ஜூலை 26ஆம் திகதியுடன் காலாவதியானது. இதன் காரணமாக தங்காலை கலால் பிரிவு பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் உற்பத்தியாளரிடம் சென்று வழக்குப் பதிவு செய்வதாகக் கூறி நீதிமன்றத்திற்குச் செல்லாமல் 14 இலட்சம் ரூபாவை செலுத்தி வழக்கை தீர்த்து வைக்குமாறு கோரியுள்ளனர். இதற்கு பீடி உற்பத்தியாளர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக பீடி உற்பத்தியாளரை கலால் திணைக்கள அதிகாரிகள் பலவந்தமாக கடத்திச் சென்று தாக்கி 10 இலட்சம் ரூபா பணத்தை பெற்றுக் கொண்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவர் கடத்தப்பட்ட விதம் அருகே சி. சி. ரி. வி. கமெரா வில் பதிவாகியுள்ளது.

இதேவேளை, வலஸ்முல்ல பிரதேசத்தில் பீடி உற்பத்தியாளர் ஒருவரை தாக்கி கப்பம் பெற முயற்சித்த குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள 4 கலால் அதிகாரிகளை பணி இடைநிறுத்தம் செய்ய கலால் ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து தரம் பாராமல் சட்டத்தை அமுல்படுத்துமாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய வழங்கிய பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# பாலியல் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் மீறல்!

## அபிமானி பெண்கள் கூட்டமைப்பு சாடல்

கொழும்பு, செப். 29

நாட்டில் பாலியல் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன என பெண்கள் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்படுதல் - இரக்கமற்ற - மனிதாபிமானமற்று - அவமானகரமாக நடத்தப்படுதல் போன்ற அடிப்படை உரிமை மீறல்களை இலங்கையின் பாலியல் தொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ளனர் என அபிமானி என்ற பெண்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டதும் பாலியல் தொழிலாளர்கள் தங்கள் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதை அடிக்கடி எதிர்கொள்கின்றன. தங்களை கைது செய்த பின்னர் போதைப்பொருள் வைத்திருந்த பொய்யான குற்றச்சாட்டின்கீழ் தங்களை நீதிமன்றத்தில் நிறுத்துவதாகவும் பொலிஸாரும் வாடிக்கையாளர்களும் தங்களை துன்புறுத்துவதாகவும் பாலியல் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எங்கள் கைதுகள் குறித்து விசாரணைகள் இடம்பெற்றதும் நாங்கள் போதைப்பொருள் வைத்திருந்தோம் என குற்றம் சாட்டப்பட்டுள்ளோம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர் என சகுனி மாயாதுன்ன என்ற பாலியல் தொழிலாளி தெரிவித்துள்ளார்.

பாலியல் தொழில் என்பது சட்டபூர்வமற்றது என்பதால் பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் துன்புறுத்தல்களை எதிர்கொள்வார்கள்என சிறுவர் பெண்கள் துஸ்பிரயோக தடுப்பு பிரிவை சேர்ந்த ரேணுகாஜெய சுந்தர தெரிவித்துள்ளார்.

எனினும், நாட்டில் அனைத்து பிரஜைகளுக்கும் அடிப்படை உரிமை உள்ளது தடுத்துவைப்பவர்களை தாக்குவதற்கு நாங்கள் பொலிஸாருக்கு அனுமதியளிக்கவில்லை மேலும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை பணிக்கு அமர்த்தவேண்டும் இவை நடக்காவிட்டால் முறைப்பாடு செய்யலாம் என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஏழு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, செப். 29

சீரற்ற வானிலை காரணமாக 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை தெரிவித்துள்ளது.

அதில், 3 மாவட்டங்களுக்கு இரண்டாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய பிரதேசம், கண்டி மாவட்டத்தின் பஸ்பாகே கோரளை பிரதேசம், மாத்தறை மாவட்டத்தின் கொட்டபொல மற்றும் பிட்டபெத்தர பிரதேசம் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி பிரதேசம் ஆகிய பகுதிகளுக்கு இரண்டாம் கட்ட மண்சரிவுஅபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி கடந்த 24 மணித்தியாலங்களில் குறித்த பிரதேசங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து மழை பெய்தால், மண்சரிவு, பாறை சரிவு, நிலம் தாழிறக்கம் குறித்து அவதானமாக இருக்குமாறும், தேவைப்பட்டால் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல தயாராக இருக்குமாறும் அப்பகுதி மக்கள் மேலும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (அ)

## நீதிபதி...

அமைக்கும்படி அழுத்தம் பிரயோகித்தார்.

"குருந்தூர்மலை வழக்குடன் தொடர்புபடுத்தி எனக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் (Court of Appeal) எனது தனிப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்டு இரண்டு வழக்குகள் கோப்பிடப்பட்டுள்ளன.

இவற்றின் அடிப்படையில் எனக்கு நேர்ந்த உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக நான் மிகவும் நேசித்த எனது நீதிபதி பதவிகள் அனைத்தையும் துறந்துள்ளேன்.

இது குறித்த பதவி விலகல் கடிதத்தை கடந்த 23-09-2023 அன்று பதிவுத் தபால் ஊடாக நீதி சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளேன் - என்றார்.

குருந்தூர்மலை ஆதிஐயனார் ஆலய பகுதியில் ரஜமகா விகாரை தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன் அமைக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆதிஐயனார் ஆலய நிர்வாகம் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடுத்தது. இது தொடர்பான வழக்கில் விகாரை கட்டுமானத்துக்கு இடைக்கால தடை நீதிவான் விதித்திருந்தார்.

அத்துடன், ஆதி ஐயனார் ஆலயத்தில் வழிபடவும் பூசைகள் மற்றும் பொங்கல் இடம்பெறவும் நீதிபதி சரவணராஜா அளித்த தீர்ப்புகள் முக்கியத்துவம் பெற்றன இதைத் தொடர்ந்து அவருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. இந்த அச்சுறுத்தல் களுக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு, கிழக்கில் பரவலாக போராட்டங்களும் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 13ஆவது...

தொடர்பில் ஒரு மாற்றத்தை கொண்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். ஆனால், அது தாமதப்படுகின்றது.

நேற்று அவர் தனது இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்படி விடயங்களை தெரிவித்தார்.

தொடர்ந்தும்,

வடக்கு - கிழக்கில் தமிழ் மொழி அமுலாக்கம் தொடர்பான அதிகாரி தொடர்ந்தும் பெரும்பான்மை இனத்தவராகவே இருப்பது தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

"இதிலே நான் காண்பது என்னவென்றால் அவருக்கு ஆதரவளிக்கும் கட்சியிலே இருப்பவர்கள் பல விதத்திலும் அவ்வாறான நல்ல நடவடிக்கைகளிலே இறங்குவதை எதிர்க்கின்றார்கள். அந்த எதிர்ப்பின் நிமிர்த்தம் இவர் எங்களுக்கு வெளிப்படையாக செய்வதாக சொன்ன விடயங்களைகூட இன்னும் செய்யாமல் இருக்கின்றார்.

பலர் எங்களிடம் நாங்கள் உங்களுக்கு சொன்ன மாதிரி ரணில் ஒரு நாளும் இதை செய்யமாட்டார் - அதை செய்யமாட்டார் என்று எங்களை குற்றம் கூறுகின்றார்கள். எங்களுக்கு அந்தக் குற்றங்களை பற்றி எங்களுக்கு கவலை இல்லை.

அவரின் மூலமாக எந்த விதத்திலே சில நடவடிக்கைகளை எடுக்கமுடியுமோ அவற்றை செய்ய வேண்டும் - அவற்றை செய்து கொண்டிருக்கிறோம். அவற்றுக்கு யார் யார் நெருக்குதல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களை பிடித்து அவற்றை செய்து கொண்டிருக்கின்றோம்.

அவர் செய்ய மாட்டார் என்று விட்டு ஒரு பக்கத்திலே இருப்பது வேலை இல்லை. அவர்கள் எப்படியாவது தமிழ் மக்களுடைய வருங்காலத்தை உத்தேசித்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து 13ஆவது திருத்தச்சட்டத்தையாவது நாங்கள் வலுவாக நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதைத்தான் செய்து கொண்டிருக்கின்றோம். அவரைக் கண்டு பேசி அதற்குரிய நடவடிக்கைகளை வருங்காலத்தில் எடுப்போம் - என்றார். (ஐ)

## வரலாற்றில்...

அமெரிக்கா - இலங்கை வணிக சபையின் 31ஆவது பொது கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"நிலைபேண்தகு அபிவிருத்தியையும் பொருளாதார வளர்ச்சியையும் அடைந்துகொள்ள இலங்கை மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கையின் பிரகாரம் பல்வேறு மறுசீரமைப்புகளை இலங்கை மேற்கொண்டுள்ளதுடன், மேலும் பல கோரிக்கைகளையும் நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கமும் அதன் பிரதிநிதிகளும் இந்த விடயத்தை வெற்றிகொள்ள முழுமையாக தம்மை அர்ப்பணித்து பணியாற்றுவதையும் நான் அறிவேன். அரசாங்கத்தின் அர்ப்பணிப்பின் இலக்கானது நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதுடன், அதற்கான தடைகளை நீக்குவதாகும் என்பதையும் அறிவேன். பழைய கலாசாரங்களின் பிரகாரம் நாம் ஆரம்பித்த அதே இடத்துக்கு மீண்டும் செல்வது அல்ல இலக்கா இருக்க வேண்டியது.

இலங்கை இன்னமும் நெருக்கடியில் இருந்து மீளவில்லை. அதுதான் நாம் வெற்றிகொள்ள வேண்டிய இலக்கு. அமைவிடத்தின் ஊடாக இலங்கை தெற்காசியாவில் வளர்ச்சியடைந்த நாடாக மாற முடியும். வரலாற்றில் எதிர்கொண்ட சவால்களில் பாடங்களின் ஊடாக சகலரதும் பங்குபற்றலில் ஊடாக இந்த நெருக்கடியில் இருந்து மீள இதனை ஒரு சந்தர்ப்பமாக மாற்றிக் கொள்ள வேண்டும்" - எனவும் அமெரிக்க தூதுவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## ஐ.எம்.எவ்....

ஜேர்மன் பயணம் நிறைவடைந்தவு டன், இரண்டாவது தவணைக் கடனை பெற்றுக்கொள்வதற்கான செயல்குழு இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வ தற்கான பேச்சுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று வியாழக்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்குழு மட்டத்திலான இணக்கப்பாட்டை விரைவில் எட்ட முடியும் என்ற நம்பிக்கை அரசாங்கத்துக்கு உள்ளது. அதற்காக வரி சேகரிப்பு செயற்பாடுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்த்திருத்தங்கள் மற்றும் வரி செலுத்தாமல் இருப்போரை கண்டறிவதற்கான வேலைத்திட்டம் என்பன குறித்தும் ஐ. எம். எவ் குழுவினர் ஆலோசனைகளை வழங்கியிருந்தனர்.

மேலும் இந்த பேச்சுகள் தொடர்பிலான தவறான எண்ணங்களை பரப்ப சிலர் முயற்சித்து வருவதாகவும், மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் இன்னும் பல செயன்முறைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் இலங்கையின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் முழுமையாக நிறைவடைந்துள்ள நிலையில், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இணைத் தலைமைத்துவம் வகிக்கும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு செயல்பாடுகளில் இலங்கைக்கு சில நாடுகள் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று போலியான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் பலவும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்பாடுகளின் முன்னேற்றகரமான பேச்சில் தொடர்ச்சியாக பங்களிப்புச் செய்து வருகின்றன - என்றும் கூறினார். (ஐ)

# யாழில் 800 ஓட்டோக்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாணத்தில் ஓட்டோக்க ளுக்கு கட்டண மீற்றர் பொருத்தாத 800 ஓட்டோ உரிமையாளர் களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் ஓட்டோச் சார திகள் சங்கத்தின் பிரதிநிதிகளுடன், மாவட்ட செயலர் , பொலிஸார் உள்ளிட்டோர் நடத்திய சந்திப்பின்போதே பொலிஸார் இவ்வாறு தெரிவித்துள்ளனர். (அ)

# உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள சர்வதேச கலந்துரையாடல்கள் தேவை

## பேர்லினில் ஜனாதிபதி ரணில்

பேர்லின், செப். 29

2024 ஆம் ஆண்டு உலகளாவிய சவால்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வலுவான சர்வதேச திட்டமிடலுக்காக மேற்குலக நாடுகளும் ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் சீனாவுடன் தீர்மானமிக்க கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும். இதே போல் "ஒரே தீர்மானம் - ஒரே பாதை" என்ற கூட்டு வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கை போன்ற நாடுகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதோடு இதனால் உலக பொருளாதார நெருக்கடிகள்மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கை போன்ற நாடுகள் அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளிலிருந்து வரும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க பழகியுள்ளதாகவும் அது புதியதொரு விடயமல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியின் பேர்லின் நகரில் நேற்று நடைபெற்ற "பேர்லின் குளோபல்"



மாநாட்டின் முதல் நாளில் அரச தலைவர்களுக்கான கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும்போது, அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் இடையிலான வேறுபாடுகளே இறையாண்மை கடன் நெருக்கடிகளுக்கு காரணமாக அமைந்துள்ளன.

அபிவிருத்தி அடைந்துவரும் பல நாடுகள் எதிர்கொண்டுள்ள குறிப்பிடத்தக்க அளவிலான கடன் நெருக்கடி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற தற்போதை பொறிமுறைகளில் காணப்படும் கட்டுப்பாடுகள் தொடர்பில் கருத்தில் கொண்டு மேலும் நெருக்கடி நிலைமைகள் உருவாவதை தவிர்ப்பதற்கான அவசர வேலைத்திட்டங்கள் அவசியம் எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

## தமிழர்...

பெயரில் இயங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

இந்தக் கட்சியின் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்றைய தினம் பங்காளிக் கட்சியான ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரனின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) தலைவர் த. சித்தார்த்தன், ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் வேந்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்திலேயே ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்றும் இது தொடர்பில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் பேச்சு நடத்துவது எனவும் முடிவு எட்டப்பட்டது. அத்துடன், இந்த உத்தியை கொண்டு சிங்கள தரப்புகளிடம் பேச்சு நடத்துவது குறித்தும் ஆராயப்பட்டது.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசு கட்சி விலகிய போதிலும் அந்தக் கட்சியின் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம். பியே இப்போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழு கொறடாவாக உள்ளார். இதனால், பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கான நேரத்தில் தமக்கு போதுமான நேரம் ஒதுக்கப்படுவதில்லை என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. அத்துடன், பாராளுமன்றத்தில் தனித்து செயல்படவும் அந்தக் கட்சியின் எம். பிக்கள் முடிவு செய்துள்ளனர்.

இதேநேரம், இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பது தொடர்பாக அனைத்து தமிழ் கட்சிகளுடனும் மீண்டும் பேசி இந்திய தூதுவரை சந்தித்து இது தொடர்பில் பேசுவது என்றும் தீர்மானிக்கப்பட்டதாகவும் அறிய வருகின்றது. (ஐ)

## மின்சார...

பொருளாதாரத்தை சீரழித்து, மக்களை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இரண்டு தடவைகள் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. தண்ணீர் கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்கள் ஒருவேளை உணவை உட்கொள்வதற்கு கூட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வருமானத்தின் மீது அதிக வரி விதித்து சாதாரண மக்களை மேலும் மேலும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளனர். இந்த சந்தர்ப்பத்தில் மூன்றாவது முறையாக மின்சார கட்டணத்தை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எமக்கு அறியக் கிடைத்துள்ளது.

நாட்டு மக்கள் தொடர்பில் எந்த அக்கறையும் இந்த அரசாங்கத்திடம் இல்லையா என வினவுகிறோம்? சாதாரண மக்கள் எவ்வாறு இதனை தாங்கிக் கொள்வார்கள்? ஏன் அரசாங்கம் இவ்வாறு செயற்படுகிறது. நாட்டு மக்கள் எல்லாவற்றையும் ஓரளவுக்குத்தான் பொறுத்துக் கொள்வார்கள்.

மக்களின் பொறுமையை அரசாங்கம் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்க கூடாது. மக்கள் வீதிக்கு இறங்கினால் படைத் தரப்பைக் கொண்டு அடக்கி, ஒடுக்கி விடலாம் என்று நினைக்க வேண்டாம். அந்த காலம் சென்றுவிட்டது.

நாம் தெளிவாகக் ஒன்றை இந்த அரசாங்கத்திடம் கூறிக்கொள்கிறோம். மின்சாரக் கட்டணம் மீண்டும் ஒரு தடவை அதிகரிப்படுமாயின் நிச்சயம் வீதிக்கு இறங்குவோம். ரணில் தலைமையிலான அரசாங்கத்தை நேருக்கு நேர் மோதி பார்ப்போம். பொறுமையை இழந்துள்ளோம். பாராளுமன்றத்தில் இருந்தாலும் சரி இல்லாமல் போனாலும் சரி நிச்சயம் இந்த அரசாங்கத்துக்கு தக்க பாடம் புகட்டுவோம் - என்றார்.

ஈழநாடு
Eelanadu



வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திரு விழா நேற்று நடைபெற்றது. இதன்போது, பெண்ணொருவர் எடுத்த கற்பூரச்சட்டி கவனத்தை ஈர்த்தது.

# தனுஷ்க குற்றமற்றவர்!

## தீர்ப்பை அறிவித்தது ஆஸி. நீதிமன்றம்



சிட்னி, செப். 29

அவுஸ்திரேலியாவில் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டிலிருந்து இலங்கை கிரிக்கெட் அணி வீரர் தனுஷ்க குணதிலக்க விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா - சிட்னி நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகத் தகவல்கள் தெரிவித்தன.

இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றமற்றவர் என சிட்னி நீதிபதி தீர்ப்பை அறிவித்துள்ளார்.

தனுஷ்க குணதிலக்க உடலுறவின்போது ஆணுறையை அகற்றியதற்கு 'வாய்ப்பு இல்லை' என்று நிரூபிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் அவர் பொலிஸ் வாக்குமூலத்தில் உண்மையாக இருந்தார் என்றும் நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் கடந்த ஆண்டு நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் பயணத்தின்போது, யுவதி ஒருவருடன் உடலுறவில் ஈடுபட்டதாக தனுஷ்க குணதிலக்க மீது குற்றம் சுமத்தப்பட்டது.

ஆணுறையை பயன்படுத்தி உடலுறவில் ஈடுபட இணக்கம் தெரிவித்தபோதும், ஆணுறையின்றி உடலுறவில் ஈடுபட்டதாக யுவதி ஒருவர் அந்த நாட்டு பொலிஸாரி டம் முறைப்பாடு செய்திருந்தார்.

இதன்படி, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் திகதி தனுஷ்க குணதிலக்க கைதுசெய்யப்பட்டு அந்த நாட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

ஒரிரு வாரம் தடுத்து வைக்கப்பட்டிருந்த தனுஷ்க குணதிலக்க, கடும் நிபந்தனைகளுக்கு மத்தியில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு வழக்கு விசாரணைகள் தொடர்ந்த பின்னணியில், நேற்று வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

# ஆனமடுவ கூட்டுறவு தேர்தல் பொதுஜன பெரமுன வெற்றி

கொழும்பு, செப். 29

ஆனமடுவ கூட்டுறவு பொதுச் சபைக்கான பிரதிநிதிகளை நியமிப்பதற்கான தேர்தலில் பொதுஜன பெரமுன வெற்றி பெற்றுள்ளது.

பொதுஜன பெரமுனவின் ஆதரவு பெற்ற குழுவிலிருந்து 51 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் ஆதரவு பெற்ற குழுவிலிருந்து 23 பிரதிநிதிகளும், ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவு பெற்ற குழுவிலிருந்து 14 பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தியை விட அதிகமான உறுப்பினர்களை பெற்றுள்ளமை இங்கு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# பல்லாயிரம் பக்தர்கள் வடம்பிடிக்க இடம்பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார் தேர்!







வடமராட்சி, செப். 29

வரலாற்று சிறப்பு மிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

காலை வசந்த மண்டப பூசை இடம் பெற்றதைத் தொடர்ந்து வல்லிபுர பெருமான் பரிவார மூர்த்திகளுடன் காலை 9 மணிக்கு தேரில் ஆரோகணித்து வலம் வந்தார். தேருக்கு பின்புறமாக அங்க பிரதட்சை செய்தவர்கள், அடி அழித்தவர்கள், பஜனைக் குழுவினர், கற்பூரச்சட்டி, காவடிகள் என அடியவர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

ஆஞ்சநேயர் முன்னேவர பரிவார மூர்த்திகளும் தேரில் வர மூன்றாவது வல்லிபுரத்து ஆழ்வார் பெருந் தேரில் வலம் வந்தார். இதில் வடமராட்சி உட்பட யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் பல ஆயிரம் பக்தர்கள் வருகைதந்து வல்லிபரத்தாழ்வார் தேர் உற்சவத்தில் கலந்துகொண்டனர்.

கடந்த 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான வருடாந்த உற்சவத்தில் 15 வது நாளான நேற்று தேர் உற்சவம் இடம் பெற்றது. அதேவேளை இன்று பிற்பகல் வல்லிபுரத்து ஆழ்வாரின் சமுத்திர தீர்த்தமும், நாளை மறுதினம் கேணி தீர்த்தமும் இடம் பெற்று திருவிழா நிறைவு பெறவுள்ளது.

போக்குவரத்து சேவைகள் வழமையான முறையில் இடம்பெற்றன. மடங்களில் அன்னதானம் வழங்கப்பட்டதுடன் வீதிகள் தோறும் தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டு நீராகாரம் வழங்கப்பட்டது. பொலிஸார், சாரணர், இலங்கை முதலுதவி சங்க தொண்டர்களும் பக்தர்களுக்கான ஒழுங்கமைப்பு, பாதுகாப்பு கடமைகளை மேற்கொண்டனர். (அ-02)

# நாணய நிதிய 2ஆம் தவணையை இலங்கை அரசு விரைவில் பெறும்

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நம்பிக்கை

கொழும்பு, செப். 29

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையை இலங்கை விரைவில் பெறும் என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லை என சர்வதேச நாணய நிதியம் நேற்று முன்தினம் அறிவித்திருந்த நிலையில் அவர் இதனை குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையை விரைவாக பெற்றுக் கொள்வோம் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக அவர் கூறினார்.

பொருளாதார நெருக்கடியின் மிகவும் கடினமான தருணங்களை வெற்றிகரமாகச் சமாளித்த அரசாங்கம், எதிர்வரும் நாட்களில் அதிலிருந்து முற்றாக விடுபடுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை அந்நிலையில் இருந்து மீண்டு வருவதாகவும் அனைத்தையும் சமாளிக்கும் திறன் இருப்பதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூயர் சுட்டிக்காட்டியதாக ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள மேலும் சில தடைகளை கடக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறினார். (அ)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டது

கொழும்பு, செப். 29

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் இணையவழி பாதுகாப்பு சட்டமூலங்கள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், இணையவழி அமைப்புகளின் பாதுகாப்பு தொடர்பான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் இணையவழி அமைப்புகளின் பாதுகாப்பு குறித்த ஆணைக்குழுவை நிறுவுவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை நாடாளுமன்றம் கூடவுள்ளது.

இந்தநிலையில், பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டை விட்டு வெளியேறும் தொழில் நிபுணர்கள் மீதான ஒத்திவைப்பு வேளை விவாதம் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (அ)

# நாட்டை விட்டு வெளியேறி வரும் வல்லுநர்களுக்கு பட்ஜெட்டில் தீர்வு

கொழும்பு, செப். 29

பல்வேறு தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறும் பிரச்னைகளுக்கு இந்த வருட வரவு-செலவுத் திட்டத்தில் தீர்வுகள் வழங்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாடு பொருளாதார ரீதியாக கடுமையான நெருக்கடியை சந்தித்ததாக அறிவிக்கப்பட்டுள்ள சூழலில் நிதியமைச்சரும், நிதி அமைச்சும் நெருக்கடிகளுக்கு மத்தியில் செயற்படுவதாகவும், இவ்வாறான நிலையில் சில இன்னல்களுக்கு மக்கள் ஆளாக வாய்ப்பு உள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது மருத்துவத் துறைக்காக அல்ல. நாட்டை பாதித்துள்ள பொருளாதார நெருக்கடி காரணமாகவே வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர்.

சுகாதார சேவையை சரிவின்றி நடத்துவதற்காக வைத்தியர்களின் ஓய்வு வயதை 63 ஆக உயர்த்துதல், ஒப்பந்த அடிப்படையில் வைத்தியர்களை பணியமர்த்துதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன- என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 7 ஆண்டுகளின் பின் இந்தியா சென்றது பாகிஸ்தான் அணி



ஹைதராபாத், செப். 29

சுமார் ஏழு ஆண்டுகளுக்கு பிறகு இந்தியா சென்றுள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் அணி. எதிர்வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் விளையாடும் வகையில் இந்தியாவுக்கு வந்துள்ளது பாபர் அஸாம் தலைமையிலான பாகிஸ்தான் அணி.

இன்று வெள்ளிக்கிழமை உலகக் கிண்ணத் தொடரின் முதல் பயிற்சி ஆட்டத்தில் நியூசிலாந்து அணிக்கு எதிராக பாகிஸ்தான் விளையாடுகிறது. இந்தப் போட்டி ஹைதராபாத் நகரில் நடைபெறுகிறது. தொடர்ந்து ஒக். 3ஆம் திகதி அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக 2ஆவது பயிற்சி ஆட்டத்தில் விளையாடுகிறது. ஒக். 6ஆம் திகதி நெதர்லாந்து அணிக்கு எதிராக முதல் லீக் போட்டியில் விளையாடுகிறது.

இரு நாட்டு கிரிக்கெட் ரசிகர்களும் ஆவலுடன் எதிர்பார்க்கும் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இடையிலான போட்டி ஒக்ரோபர் 14ஆம் திகதி நடைபெறுகிறது. இந்தப் போட்டி அகமதாபாத் நக ரில் உள்ள நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறுகிறது.

பாகிஸ்தான் அணி இந்தியா செல்வதில் வீசா சிக்கல் இருந்தது. கடைசியாக கடந்த 2016 டி20 உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க பாகிஸ்தான் இந்தியா வந்திருந்தது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகள் இரு நாட்டு கிரிக்கெட் தொடரில் பங்கேற்று விளையாடுவது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

'உலகக் கிண்ணக் கிரிக் கெட்-2023' தொடர் ஒக்ரோபர் 5ஆம் திகதி முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை இந்தியாவில் உள்ள 10 நகரங்களில் நடைபெறவுள்ளது. தொடரை இந்தியா நடத்துகிறது. மொத்தம் 48 போட்டிகள். தொடரில் இலங்கை, இந்தியா, நடப்பு சம்பியன் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, பங்களாதேஷ் ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய 10 நாடுகள் பங்கேற்கின்றன.

பாகிஸ்தான் அணி:

பாபர் அஸாம் (அணித் தலைவர்), ஷதாப் கான், பகார் ஷமான், இமாம்-உல்-ஹக், அப்துல்லா ஷபீக், முகமது ரிஸ்வான், சௌத் ஷகீல், இப்திகார் அகமது, சல்மான் அலி ஆகா, முகமது நவாஸ், உசா மாமிர், ஹாரிஸ் ரவூப், ஹசன் அலி, ஷாஹின் ஷா அப்ரிடி, முகமது வசீம்.



# உலகக் கிண்ணத்துடன் நவீன் உல் ஹக் ஓய்வு!

காபூல், செப். 29

உலகக் கிண்ணத் தொடருடன் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாக ஆப்கானிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் நவீன் உல் ஹக் (வயது 24) அறிவித்துள்ளார்.

ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க இந்தியா வந்துள்ள ஆப்கானிஸ்தான் அணியில் நவீன் உல் ஹக் இடம்பெற்றுள்ளார். 24 வயதாகும் நவீன், ஆப்கான் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளராக உள்ளார்.

ஆப்கான் அணிக்காக கடந்த 2016ஆம் ஆண்டு முதல் விளையாடி வரும் நவீன், இதுவரை 7 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 14 விக்கெட்களை எடுத்துள்ளார்.

இருப்பினும், கடந்த 2021-ஆம் ஆண்டுமுதல் ஒருநாள் தொடருக்கான அணியில் இடம்பெறாமல் இருந்தார். சமீபத்தில் நடந்த ஆசியக் கிண்ணத் தொடரிலும் இடம்பெறவில்லை. இந்த நிலையில், இந்த உலகக் கிண்ணத்துடன், ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறப் போகிறார் என்றும் தொடர்ந்து இருபது - 20 போட்டிகளில் விளையாடுவேன் என்றும் இன்ஸ்ட்ராகிராமில் நவீன் தெரிவித்துள்ளார்.

ஐ. பி. எல். பிக்பாஷ் லீக் போன்ற தொடர்களில் நவீன் விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# உலகக் கிண்ணத்தை தென்னாபிரிக்கா வெல்லும்!

## ரபாடா நம்பிக்கை தெரிவிப்பு

கேப்டவுன், செப். 29

தென்னாப்பிரிக்க அணி முதன்முறையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றும் என அந்த அணியின் வேகப் பந்துவீச்சாளர் ககிசோ ரபாடா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரின் முதன்மை போட்டிகள் தொடங்க இன்னும் சில நாள்களே உள்ளன. முன்னதாக உலகக் கிண்ணத்தில் கலந்து கொள்ளும் அணிகள் தங்களுக்குள் பயிற்சி ஆட்டங்களில் விளையாட உள்ளன. உலகக் கிண்ண வரலாற்றில் இதுவரை ஒருமுறை கூட இறுதிப் போட்டிக்கு தென்னாபிரிக்க அணி முன்னேறியது இல்லை.

இந்த நிலையில், தென்னாப்பிரிக்க அணி முதல் முறையாக உலகக் கோப்பையை கைப்பற்றும் என அந்த அணியின் வேகப் பந்துவீச்சாளர் ககிசோ ரபாடா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

தென்னாபிரிக்க வீரர்களின் நம்பிக்கை என்றுமே குறைந்ததில்லை. இந்த உலகக் கிண்ணத் தொடரில் சம்பியன் பட்டம் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. உலகக் கிண்ணத்தை வெல்லும் திறன் கொண்ட வீரர்கள் எங்களிடம் இருக்கிறார்கள். உலகக் கிண்ணத்தில் முதன்முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறி கிண்ணத்தை வெல்ல முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இந்த உலகக் கிண்ணம் சவாலானதாக இருக்கப் போகிறது. ஆனால், போட்டிகள் உண்மையில் உற்சாகத்தை ஏற்படுத்தும் விதமாக அமையப் போகிறது - என்றார். (ஐ)

# இறுதி போட்டியில் ஆஸி. வெற்றி தொடர் இந்திய அணியின் வசம்!

ராஜ்கோட், செப். 29

ராஜ்கோட் விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிவுக்கு எதிரான மூன்றாவதும் கடைசியுமான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 66 ஓட்டங்களால் அவுஸ்திரேலியா வெற்றியீட்டியது.

உலகக் கிண்ணப் போட்டி அண்மித்துக்கொண்டிருக்கும் நிலையில் இந்த வெற்றி அவுஸ்திரேலிய அணிக்கு பெரும் உற்சாகத்தைக் கொடுத்துள்ளது.

கடைசிப் போட்டியில் தோல்வி அடைந்த போதிலும் முதல் இரண்டு போட்டிகளில் வெற்றியீட்டிய இந்தியா தொடரை 2 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 352 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் மிற்செல் மார்ஷ் 13 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 96 ஓட்டங்களையும் டேவிட் வோர்ணர் 6 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 56 ஓட்டங்களையும் குவித்ததுடன் முதலாவது விக்கெட்டில் 78 ஓட்டங்களை பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக் கொடுத்தனர்.

தொடர்ந்து மிற்செல் மார்ஷ், ஸ்டீவன் ஸ்மித் (74) ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டில் 137 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு மேலும் பலம் சேர்த்தனர். இவர்களை விட லபுஷான் 72 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ஜஸ்ப்ரித் பும்ரா 81 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் குல்தீப் யாதவ் 48 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

353 ஓட்டங்கள் என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்தியா 49.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 286 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

ரோஹித் ஷர்மா 6 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 81 ஓட்டங்களையும் விராட் கோலி 56 ஓட்டங்களையும் ஷ்ரேயாஸ் ஐயர் 48 ஓட்டங்களையும் ரவீந்த்ர ஜடேஜா 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆரம்ப விக்கெட்டுக்காக வாஷிங்டன் சுந்தருடன் 74 ஓட்டங்களையும் 2ஆவது விக்கெட்டில் விராட் கோலியுடன் 72 ஓட்டங்களையும் ரோஹித் ஷர்மா பகிர்ந்தார். ஆனால், அதன் பின்னர் சிறந்த இணைப்பாட்டம் ஏற்படவில்லை.

பந்துவீச்சில் க்ளென் மக்ஸ்வெல் 40 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் ஜொஷ் ஹஸல்வூட் 42 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.



# உலகையே தன் உள்ளங்கைக்குள் வைத்திருந்த ஊடக ஜாம்பவான் ரூப்பர்ட் முர்டோக்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

அமெரிக்காவின் ஃபாக்ஸ் மற்றும் நியூஸ் கார்ப் நிறுவனத்தின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக 92 வயதான ஊடக அதிபர் ரூப்பர்ட் முர்டோக் வியாழக்கிழமை (செப்டம்பர் 21) அறிவித்ததாக தகவல் வெளியாகியுள்ளது. அவுஸ்திரேலியாவில் பிறந்த அமெரிக்க செய்தி மற்றும் ஊடகத் துறை தொழிலதிபர் ரூப்பர்ட் முர்டோக் தனது ஃபாக்ஸ் ரூ நியூஸ் கார்ப் (Fox & News Corp) ஆகிய நிறுவனங்களின் தலைவர் பதவியை ராஜினாமா செய்யப்போவதாக அறிவித்தார்.

**ஈராக் மீதான ஊடகப் போர்:**

ஈராக் மீதான போரினால் நாகரீக உலகத்து மக்களின் நல்வாழ்வு பாதுகாக்கப்படும் என்றும் அம்மக்கள் நம்பும் அளவுக்கு உளவியல் ரீதியில் ரூப்பர்ட் முர்டோக்கின் ஊடகங்கள் பாரியளவில் பொய்மையான பிரச்சாரம் செய்தது. இதன் மூலம் போருக்கு ஆதரவாக உலகெங்கிலும் ஒரு பொதுக்கருத்தை உண்டாக்குவதில் முர்டோக் வெற்றியடைந்தார்.

ஆனால் போரின் முடிவில் இரசாயன ஆயுதங்கள் ஏதும் ஈராக்கில் கண்டிபிடிக்கப் படவில்லை. ஈராக் போரில் கொல்லப்பட்ட ஈராக்கியர்களின் எண்ணிக்கை சுமார் பத்து லட்சம் அப்பாவி மக்கள்.

ஆப்பிரிக்கா, மற்றும் அன்டார்டிகா இரு கண்டங்களைத் தவிர மற்ற அனைத்து கண்டங்களிலும் அவர் தனது ஊடகங்களை நிறுவி செயல்படுத்தினார். இவருக்கு 146 செய்தித்தாள் நிறுவனங்களும், 28 வார, மாத இதழ்களும், பாக்ஸ் டிவி, ஸ்டார் குழும சேனல்கள் போன்ற பல சேனல்களும் உள்ளன.

ரூப்பர்ட் முர்டோக்கிற்கு உலகம் முழுவதும் பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் உள்ளன. இந்தியாவின் ஸ்டார் குழுமம், தமிழில் விஜய் தொலைக்காட்சியும் இந்நிறுவனத்திற்கு சொந்தமானவையாகும். ரூப்பர்ட் முர்டோக்கின் பத்திரிகை நிறுவனத்தில் இரண்டாம் பெரிய பங்குதாரர் சவூதி அரேபியா இளவரசர் அல்லாவி -பின்-தலால் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**டொனால்ட் ட்ரம்ப் வெற்றிக்கு பிரச்சாரம்**

ஃபாக்ஸ் நியூஸ் தொலைக்காட்சி போலிச் செய்திகளுக்கும், வலது சாரி தகவல்களுக்கும் பெயர் பெற்றது. டொனால்ட் ட்ரம்ப் அதிபரானதற்கு இந்த தொலைக்காட்சியின் தவறான செய்திகள் மற்றும் பிரச்சாரம் ஒரு முக்கிய காரணம் ஆகும். உலக அளவில் ஃபாக்ஸ் நியூஸ்




மாதிரி என்பது இத்தகைய பொய்ச்செய்தி பிரச்சாரத்திற்கு பயன்படுத்தப்படும் ஒரு வழக்காகும்.

எதேச்சதிகார ஆட்சிகள் தங்கள் சமூகங்களுக்குள் உள்ள தகவல்களின் மீதான கட்டுப்பாட்டை கடுமையாக்குவதாக எல்லைகளற்ற பத்திரிகையாளர்கள் சங்க அறிக்கை குறிப்பிடுகின்றது. இந்தக் கட்டுப்பாடு மற்றம் அதன் தாக்கம், ஜனநாயகங்களுக்கு எதிராக 'பிரச்சாரப் போர்களை" நடத்துவதற்கும் அவற்றிற்குள் பிளவுகளை ஏற்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

**ரூப்பர்ட் முர்டோக் மீது குற்றச்சாட்டு:**

ரூப்பர்ட் முர்டோக்கின் ஊடக சாம்ராஜ்ஜியத்தைச் சேர்ந்த 'நியூஸ் ஆப் த வோர்ல்ட்' எனும் பத்திரிகை காவல்துறைக்கு இலஞ்சம் கொடுத்து, லண்டன் குண்டு வெடிப்பு மற்றும் அமெரிக்காவில் நடந்த செப்டம்பர் 11, 2001 தாக்குதல்கள் போன்றவற்றில் இறந்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுடைய தொலைபேசிகளை ஒட்டுக் கேட்டுள்ளது என்ற உண்மை அம்பலமாகியிருக்கிறது.

அது மட்டுமின்றி, இங்கிலாந்து அரச குடும்பத்தினரின் தொலைபேசிகளையும் கூட முர்டோக்கின் ஊடகங்கள் கள்ளத்தனமாக ஒட்டுக் கேட்டிருக்கிறது. அரச குடும்பத்தின் அந்தரங்கத்திலேயே மூக்கை நுழைத்துவிட்டார் ரூப்பர்ட் முர்டோக் என்றும் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது.

முர்டோக்கின் செய்தித்தாள்கள் பல்வேறு காலகட்டங்களில் போலீசாருக்கு லஞ்சம் கொடுத்தும், சட்டவிரோதமான வகையிலும் தொலைபேசிகளை ஒட்டுக் கேட்டும்,




செய்திகளைத் திரட்டியுள்ளது என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்தது.

தொடர்ந்து நடந்த விசாரணைகளில் 'நியூஸ் ஆப் த வோர்ல்ட்' பத்திரிகை லண்டன் போலீசின் கணினிமயமாக்கப்பட்ட ஆவணங்கள் மொத்தத்தையும் இலஞ்சம் கொடுத்து கள்ளத்தனமாக கைப்பற்றியிருக்கிறது என்ற உண்மையும் வெளியாகியுள்ளது.

முர்டோக் மீதான குற்றச்சாட்டுகளின் பின்விளைவுகள் 168 ஆண்டுகளாக வெளியாகிக் கொண்டிருந்த 'நியூஸ் ஆப் த வோர்ல்ட்' என்ற வாராந்திர இதழை 10-07-2011 முதல் நிறுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியது. இங்கிலாந்து காவல்துறை ரூப்பர்ட் முர்டோக் மீது பல குற்றவழக்குகள் பதிவுசெய்தது. வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் இன்னமும் நிலுவையில் உள்ளது.

**ஊடக ஜாம்பவான் ரூப்பர்ட் முர்டோக் ஃபாக்ஸ் ரூ நியூஸ் கார்ப் தலைமைப் பதவியில் இருந்து விலகினாலும், அமெரிக்கா மட்டுமல்ல உலகின் ஊடகங்களை கச்சிதமாக கையாண்ட ஆளுமை மிக்கவராகவே புலப்படுகிறார்**

**ஊடக தொழில் பின்னணி**

ரூப்பர்ட் முர்டோக் 1996 இல் ஃபாக்ஸ் நியூஸை சிஎன்என் நிறுவனத்திற்கு போட்டியாகத் தொடங்கி, இறுதியில் அமெரிக்காவில் முதன்மையான கேபிள் செய்தி சேனலாக ஆக்கினார். ஃபோர்ப்ஸின் கூற்றுப்படி, முர்டோக்கின் சொத்து சுமார் 17 பில்லியன் அமெரிக்க டாலர் என்று நம்பப்படுகிறது.

தனது ஊடக சாம்ராஜ்யத்தில் ஃபாக்ஸ் நியூஸ், வால் ஸ்ட்ரீட் ஜர்னல், தி நியூயார்க் போஸ்ட் மற்றும் உலகெங்




கிலும் உள்ள பிற ஊடக நிறுவனங்களில் பங்குகளை வைத்துள்ளார். குடும்ப வாழ்க்கையைப் பொறுத்தவரை பல திருமணங்களில் இருந்து ஆறு குழந்தைகளை கொண்டுள்ளார்.

**92 வயதில் 5வது திருமணம்:**

92 வயதில் உலகின்புகழ்பெற்ற ஊடக அதிபர் ரூப்பர்ட் முர்டோக் 5வது முறையாக திருமணம் செய்து கொண்டார். அவரது காதலி ஆன் லெஸ்லி ஸ்மித்தை கடந்தாண்டு அவரது திராட்சை தோட்டத்தில் ஒரு நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிக்கொண்டிருந்த கலிபோர்னியாவில் அவர்களின் இந்த சந்திப்பு நடைபெற்றது.

ரூப்பர்ட் முர்டோக் ஆன் லெஸ்லியுடன் ஓராண்டு டேட்டிங் செய்தபின் திருமணம் செய்தார்.

முர்டோக் திருமணம் செய்த ஆன் லெஸ்லி, 66 வயதானவர். சேன் பிரான்சிஸ்கோவில் முன்னாள் காவல் துறை அதிகாரி. அமெரிக்க பாடகர் மற்றும் ஊடக நிர்வாகி செஸ்டர் ஸ்மித்தின் முன்னாள் மனைவி. முர்டோக் தனது 4வது மனைவியும் மாடலுமான ஜெரி ஹாலை கடந்தாண்டு விவாகரத்து செய்தார். அவருடனான ஆறு ஆண்டு திருமண வாழ்க்கையை கடந்தாண்டு முறித்துக் கொண்டார்.

இவர் பாட்டிக்கா புக்கர் என்ற விமான பணிப் பெண்ணை முதலில் திருமணம் செய்திருந்தார். அவரை 1960களிலே விவாகரத்து செய்துவிட்டார். அவரது இரண்டாவது மனைவி அன்னா, பத்திரிக்கை செய்தியாளர், இருவரும் 30 ஆண்டுகளுக்கு மேலாக சேர்ந்து வாழ்ந்தார்கள் ஆனால் 1999ம் ஆண்டு அவரையும் விவாகரத்து செய்துவிட்டார். வெண்டி டெங்குடனான அவரது மூன்றாவது திருமணம் 2013ல் முடிவடைந் தது.

**அவுஸ்திரேலியாவில் பிறந்த அமெரிக்க ஊடக தொழிலதிபர்:**

கீத் ரூப்பர்ட் முர்டோக் (Keith Rupert Murdoch) மார்ச் 11, 1931 இல் பிறந்த அவுஸ்திரேலியத் தொழிலதிபர். இவரின் வணிக நிறுவனம் நியூஸ் கார்ப்பரேஷன் உலகில் மிகப்பெரிய ஊடக நிறுவனங்களில் ஒன்றாகும். ஃபோர்ப்ஸ் சஞ்சிகையின் உலகப் பணக்காரர்களின் பட்டியலில் 2008இல் இவர் 109ஆம் நிலையில் உள்ளார்.

இவரது நியூசு கார்ப்பரேசன் எனும் நிறுவனம், ஐந்து கண்டங்களிலும் தொலைக்காட்சி ஒளிபரப்பும் செயற்கைக் கோள்கள், 'வால் ஸ்டிரீட் ஜர்னல்', 'டைம்ஸ் ஆப் லண்டன்', 'நியூயார்க் போஸ்ட்' உள்ளிட்டு உலகெங்கும் 175 செய்தித்தாள்கள், அமெரிக்காவில் மட்டும் 35 தொலைக்காட்சி நிலையங்கள், 19 விளையாட்டு சானல்



கள், டுவென்டியத் சென்சுரி பாக்ஸ் என்ற ஹாலிவுட் திரைப்பட நிறுவனம் என இத்தனைக்கும் உரிமையாளரான உலக ஊடகத்துறை சாம்ராச்சியத்தின் சக்ரவர்த்தி ரூப்பர்ட் முர்டோக் தற்போது தனது பதவியில் இருந்து விலகுகிறார்.

**ரூப்பர்ட் முர்டோக்கின் ஊடகங்கள்:**

நியூயார்க் போஸ்ட் (அமெரிக்கா), வால் ஸ்ட்ரீட் ஜெர்னல் (அமெரிக்கா), சான் அன்டோனியோ எக்ஸ் பிரஸ்-நியூஸ் (அமெரிக்கா), பாக்ஸ் டிவி (அமெரிக்கா), தி சன் (இங்கிலாந்து), நியூஸ் ஆஃப் தி வேர்ல்டு (இங்கிலாந்து), அடிலெய்டு நியூஸ் (ஆஸ்திரேலியா), சண்டே டைம்ஸ் (ஆஸ்திரேலியா), தி டெய்லி மிரர் (ஆஸ்திரேலியா), தி ஆஸ்திரேலியன் (ஆஸ்திரேலியா), ஸ்டார் குரூப்ஸ் (இந்தியா) ஆகியன ரூப்பர்ட் முர்டோக்கின் ஊடகங்கள் ஆகும்.

உலகையே தன் உள்ளங்கைக்குள் வைத்திருந்த, ஊடக ஜாம்பவான் ரூப்பர்ட் முர்டோக் ஃபாக்ஸ் ரூ நியூஸ் கார்ப் தலைமைப் பதவியில் இருந்து விலகினாலும், அமெரிக்கா மட்டுமல்ல உலகின் ஊடகங்களை கச்சிதமாக கையாண்ட ஆளுமை மிக்கவராகவே புலப்படுகிறார்.

# அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி முறிவால் தி.மு.க வுக்கு என்ன பிரச்னை?

அதிமுக - பா.ஜ.க. இடையே 2 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வந்த உரசல் இரு கட்சிகளின் பிரிவுக்கு வழிவகுத்துள்ளது. பா.ஜ.க.வுடனான கூட்டணியை முறித்துக் கொள்வதாக அதிமுக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, தேசிய அளவிலும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியேறுவதாக அதிமுக அறிவித்துள்ளது. அதிமுக தனது முடிவை அறிவித்த பிறகு மாநில பா.ஜ.க. தலைமை இதுவரை கருத்து ஏதும் தெரிவிக்காமல் மவுனம் சாதித்து வருகிறது.

நாடாளுமன்ற தேர்தல் நெருங்கும் நிலையில் அதிமுக இந்த முடிவுக்கு வந்தது ஏன்? அதன் பின்னணியில் உள்ள எடப்பாடி பழனிசாமியின் அரசியல் கணக்கு என்ன? சிவசேனாவைப் போல அதிமுகவில் இருந்தும் ஒரு ஏக்நாத் ஷின்டே உருவெடுப்பாரா? பா.ஜ.க. என்ன செய்யப் போகிறது? அதிமுக முடிவால் திமுகவுக்கு என்ன பிரச்னை?

**அதிமுக - பாஜக உறவு எப்போது தொடங்கியது?**

தமிழ்நாட்டில் பா.ஜ.க.வை பரவலாக அறியச் செய்ததில் அதிமுகவுக்கு முக்கிய பங்கு உண்டு என்றால் மிகையல்ல. 1998-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வுடன் முதன் முதலாக கூட்டு சேர்ந்த அதிமுக, தங்களது கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக வாஜ்பேயி முகத்தை சுவர் விளம்பரங்கள், பிரசுரங்கள் மூலம் வீட்டிற்கு வீடு கொண்டு போய் சேர்த்தது. அடுத்த ஓராண்டுக்குள்ளேயே அந்த கூட்டணி கசந்துவிட, டில்லியில் நடந்த தேநீர் விருந்து வாஜ்பாய் அரசின் ஆயுளை 13 மாதங்களில் முடித்துவிட்டது.

அதன் பிறகு 2004-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்த அதிமுகவுக்கு படுதோல்வியே பரிசாக கிடைத்தது. இதையடுத்து, பா.ஜ.க.வுடன் இனிமேல் ஒருபோதும் கூட்டணியே கிடையாது என்று அதிமுகவின் அப்போதைய பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிவித்தார். அதன் பிறகு அவர் மறையும் வரை நாடாளுமன்றமோ, சட்டமன்றமோ, உள்ளாட்சியோ எந்தவொரு தேர்தலிலும் பா.ஜ.க.வுடன் அதிமுக கூட்டணி அமைக்கவே இல்லை.

2014-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்நாட்டில் தேர்தல் பிரசார கூட்டங்களில் ‘மோடியா? இந்த லேடியா?” என்று முழங்கிய ஜெயலலிதா, அதிமுகவுக்கு பெரும் வெற்றியையும் பெற்றுக் கொடுத்தார்.

**ஜெயலலிதா மறைவுக்கு பின் மீண்டும் கூட்டணி**

2016-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் அதிமுக வென்று ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சரான சில மாதங்களிலேயே உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டார். சுமார் இரண்டரை மாதங்கள் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போதே, அப்போது மத்தியில் ஆட்சியில் இருந்து பா.ஜ.க.வின் கரங்கள் அதிமுகவுக்குள் ஊடுருவி விட்டதாக அரசியல் அரங்கில் பேச்சுகள் அடிபட்டன.

அதிமுகவில் சசிகலா, ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி என ஆளாளுக்கு தலைமைப் பதவிக்கு போட்டியிட ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொருநபரை பா.ஜ.க. மறைமுகமாக ஆதரித்ததாக செய்திகள் வெளியாயின. அதிமுக உள்கட்சிப் பிரச்னையில் பா.ஜ.க. தலையீடு இருந்ததை ஓ.பன்னீர்செல்வம், கே.பி.முனுசாமி ஆகியோர் பகிரங்கமாக பொதுவெளியிலும் தெரியப்படுத்தியுள்ளனர்.

2019-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் அதிமுக - பா.ஜ.க. கூட்டணி மீண்டும் அரும்பியது. அதன் தொடர்ச்சியாக 2021-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் இந்த கூட்டணி நீடித்தது. அந்த தேர்தலில் கிடைத்த தோல்விக்குப் பிறகு அதிமுகவிலும், பா.ஜ.கவிலும் ஏற்பட்ட மாற்றங்கள் அரசியல் அரங்கிலும் நேரடியாக எதிரொலித்தது.

**எடப்பாடி பழனிசாமி - அண்ணாமலை உறவு**

2021-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலுக்குப் பிறகு பா.ஜ.க.வில் மாநிலத் தலைவராக அண்ணாமலை நியமிக்கப்பட, அதிமுகவில் ஓ.பன்னீர்செல்வத்தை ஓரங்கட்டி கட்சியின் ஒரே தலைமையாக எடப்பாடி பழனிசாமி உருவெடுத்தார். இதன் பிறகுதான், அதிமுக - பா.ஜ.க உறவில் கசப்புகள் தோன்றின.

அதிமுகவை ஓரங்கட்டிவிட்டு, தமிழ்நாட்டில் திமுக எள பா.ஜ.க. இரு துருவ அரசியல் தொடங்கி விட்டதாக அண்ணாமலை உள்ளிட்ட பா.ஜ.க. தலைவர்கள் பேசி வந்தது அதிமுகவை எரிச்சலடையச் செய்தது. அதுகுறித்தே பல முறை பகிரங்கமாக அதிமுக, பா.ஜ.க. தலைவர்கள் வார்த்தை மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

உச்சக்கட்டமாக, ஜெயலலிதா குறித்தும், எம்.ஜி.ஆரின் அரசியல் ஆசான் அண்ணா குறித்தும் அண்ணாமலை முன்வைத்த கருத்துகள் அதிமுகவை கொந்தளிக்கச் செய்துவிட்டது. இதற்கு மேலும் பொறுத்துக் கொண்டிருப்பதில் பலனில்லை என்பது போல் கடந்த வாரமே, பா.ஜக.வுடன் அதிமுக கூட்டணி முறிந்துவிட்டதாகவும், இது கட்சித் தலைமையின் முடிவு என்றும் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் அறிவித்தார்.

**அதிமுக - பா.ஜ.க. கூட்டணி முறிவு**

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கடந்த வாரம் அறிவித்ததை, கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் அதிமுக இப்போது உறுதிப்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் பா.ஜ.க.வுடன் கூட்டணியை முறித்துக் கொள்வது மட்டுமின்றி, அக்கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்தும் வெளியேறுவதாக அதிமுக அறிவித்தது.

அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை அக்கட்சி நிர்வாகிகளும், தொண்டர்களும் பட்டாசு வெடித்துக் கொண்டாட, மாநில பா.ஜ.க. தரப்போ இம்முறை மௌனம் காக்கிறது. மாநில பாஜ.க. தலைவர் அண்ணாமலையோ, “அதிமுக அறிக்கையை படித்தோம், இது குறித்து தேசிய தலைமை பேசுவார்கள்” என்று கூறி ஒரே வரியில் பதிலை சுருக்கிக் கொண்டார்.

பா.ஜ.க. கூட்டணியில் இருந்து வெளியேறும் அதிமுகவின் முடிவு தமிழ்நாட்டில் மட்டுமின்றி, தேசிய அளவிலும் கவனிக்கப்படும் ஒன்றாக மாறியுள்ளது. ஏனெனில், பா.ஜ..க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் பா.ஜ.க.வுக்குப் பிறகு பெரிய கட்சியாக இருந்தது அதிமுகதான். ஆகவே, தேசிய அளவிலும் அதிமுகவின் முடிவை ராஷ்டிரிய ஜனதா தளம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வரவேற்றுள்ளன.

**அதிமுகவின் அரசியல் கணக்கு என்ன?**

அதிமுக - பா.ஜ.க. கூட்டணி முறிவு குறித்து மூத்த செய்தியாளர் தராசு ஷ்யாமிடம் பேசினோம். இதன் மூலம் அதிமுக போடும் அரசியல் கணக்கு என்ன என்று கேட்ட போது, ‘அதிமுகவைப் பொருத்தவரை, 2024-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலை விட 2026-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலே மிகவும் முக்கியம். அத்துடன், தற்போதைய நிலையில் அக்கட்சிக்கு ஒரு எம்.பி மட்டுமே, அதுவும் ஓ.பன்னீர்செல்வத்தின் மகன் ஓ.பி.ரவீந்திரநாத் மட்டுமே இருக்கிறார். ஆகவே, வரும் நாடாளுமன்ற தேர்தலில் அக்கட்சி ஒன்றிரண்டு இடங்களில் வென்றாலே லாபம்தான். இழப்பதற்கு எதுவும் இல்லை என்ற நிலையில் அதிமுக இருக்கிறது.

## அ.தி.மு.க. தேர்தல் கணக்கு என்ன?



ஆனால், பா.ஜ.க.வைப் பொருத்தவரை அடுத்த நாடாளுமன்ற தேர்தல் அக்கட்சிக்கு முக்கியமானது. ஏனெனில், மத்தியில் ஆட்சியைப் பிடிக்கும் உத்வேகத்தில் பா.ஜ.க. இப்போதே பணிகளை முடுக்கிவிட்டுள்ளது. எதிர்க்கட்சிகளின் ‘இந்தியா’ கூட்டணிக்கு எதிராக தேசிய ஜனநாயக கூட்டணி பலமான கூட்டணியாக காட்ட அக்கட்சி முயற்சிக்கிறது. இந்த நேரத்தில், கூட்டணியில் இரண்டாவது பெயரி கட்சி வெளியேறுவது தேர்தல் நேரத்தில் பா.ஜ.க. இமேஜை பாதித்துவிடும். ஆகவே, கூட்டணி முறிவு குறித்து அதிமுகவை விட பா.ஜ.க.தான் அதிகம் கவலைப்பட வேண்டும்” என்று அவர் கூறினார்.





அப்படியென்றால், பா.ஜ.க. என்ன செய்யும் என்ற கேள்விக்கு, “ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரன் மற்றும் சில உதிரி கட்சிகளை சேர்த்துக் கொண்டு பா.ஜ.க. போட்டியிடலாம். இந்த தேர்தலில் பாமகவின் முடிவு முக்கியமானதாக இருக்கும். அக்கட்சி எந்தவொரு நிலைப்பாட்டையும் எடுக்கக் கூடும். பா.ஜ.க. வசம் குறிப்பிட்ட சில தெரிவுகளே இருக்கின்றன.” என்று தராசு ஷ்யாம் தெரிவித்தார்.

பா.ஜ.க. கூட்டணியில் இருந்து அதிமுக வெளியேறியிருப்பது ஒரு வகையில் திமுகவுக்கும் கூட பிரச்னையாக வாய்ப்புள் ளது. ஏனெனில், பா.ஜ.க. இருக்கும் கூட்டணியில் சேர்வதில்லை என்ற முடிவால் அதிமுகவை நெருங்கத் தயங்கிய சிறிய கட்சிகள், உதிரி கட்சிகள் இனி அதிமுகவை நெருங்குவதில் தயக்கம் இருக்காது. இதனால், சிறிய மற்றும் உதிரி கட்சிகள் பேரம் பேசுவதில் கூடுதல் பலம் பெற்றிருப்பதால் அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் திமுகவுக்கு தொகுதிகளை பங்கிடுவது அவ்வளவு சுலபமாக இருக்காது என்றே அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

# ஓய்வு பெற்றார் மட்டு. அரச அதிபர்

மட்டக்களப்பு, செப். 29

மட்டக்களப்பு மாவட்ட செயலக உத்தியோகத்தர்களாக என்னுடன் கடமை புரிந்த உங்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பினால் செவ்வனே எனது மக்கள் பணியை நான் மாவட்டத்திற்காக ஆற்ற முடிந் திருந்தது. அதனால் மனநிறை வுடன் எனது 32 வருட அரச பணியில் இருந்து ஓய்விற்கு செல்கின்றேன் என மட்டக் களப்பில் நேற்று இடம்பெற்ற பிரியாவிடை நிகழ்வின்போது மட்டக்களப்பு மாவட்ட அர சாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

32 வருடங்கள் அரச சேவையை பூர்த்தி செய்து அரச சேவையில் இருந்து ஓய்வு பெறும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கு மட்டக்களப்பு மாவட்ட செய லகத்தில் பிரியாவிடை நிகழ்வொன்று இடம்பெற்றது.

1991 ஆம் ஆண்டு அரச நிருவாக சேவையில் தனது அரச பணியை தொடங்கிய திருமதி.கலாமதி பத்மராஜா அம்பாறை மாவட்டத்தில் தமது முதல் நியமனத்தை பெற்று கடமையை ஆரம்பித் ததுடன், பின்னர் மட்டக்க ளப்பு மாவட்டத்தில் உதவிப் பிரதேச செயலாளராக நியம னம் பெற்று தமது கடமை யாற்றியுள்ளார்.

அதன் பின்னர் பிரதேச செயலாளராக மாவட்டத்தின் மண்முனை வடக்கு உள் ளிட்ட பிரதேச செயலகங்க ளில் கடமையாற்றி, பின்னர் நிருவாக சேவையில் பதவி யுயர்வு பெற்ற இவர் மாகாண அமைச்சிற்கு நியமிக்கப்பட்டு அங்கு 10 வருடங்கள் பல் வேறு அமைச்சுகளில் செயலா ளராக மாறி மாறி கடமையாற்றி யிருந்த நிலையில் 2020 ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட அர சாங்க அதிபராக கடமைப் பொறுப்பை ஏற்றுப் பணி யாற்றி வந்த நிலையில் மீண்டும் இடமாற்றலாகி மாகாண சபை யில் கடமையாற்றினார். இவ் வாண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி முதல் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக அமைச்சரவை அங்கிகாரத்து டன் மீளவும் நியமிக்கப்பட்டுச் செவ்வனே தமது கடமையை ஆற்றிவந்த நிலையில் இன்று







தமது 60 வயதை பூர்த்தி செய்து அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

மாவட்ட அரசாங்க அதிப ரான இவரின் சிறந்த சேவை யினை பாராட்டி பிரியாவிடை யளிக்கும் நிகழ்வானது மட் டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர் சனி சிறிகாந்த் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ் வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ஏ.எம்.பஸீர், மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வா ளர் திருமதி.ஆர்.காயத்திரி,

மாவட்ட செயலக கணக்கா ளர் எம். வினோத், மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத் தர் கணபதிப்பிள்ளை மதிவண் ணன், மாவட்ட செயலக பொறியியலாளர் ரீ.சுமன், மாவட்ட செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்க ளான வீ.நவனீதன், ஆர்.ஜதீஸ் குமார், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வீ.ஈஸ்வரன், தகவல் தொடர்பாடல் தொழி நுட்ப உத்தியோகத்தர் திருமதி. லக்சிகாக தீசன், மட்டக்களப்பு மாவட்ட செயலக சமுர்த்தி பிரிவின் பிரதம முகாமையா ளர், ஊடகப்பிரி வின் பொறுப் பதிகாரி வ.ஜீவானந்தன், புள்ளி விபரவியல் திணைக்கள அதி காரிகள் உள்ளிட்ட மாவட்ட செயலகத்தில் கட மையாற்றும் அனைத்து உத்தியோகத்தர் களும் கலந்து கொண்டு ஓய்வு பெறவிருக்கும் அரச அதிபரின் சேவையினை வாழ்த்தியதுடன் அரச அதிபரிற்கு பொன்னாடை போர்த்தி மலர் மாலைகள் அணி வித்து கௌரவமளித்தனர். (அ)

# லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

அம்பாறை, செப். 29

அக்கரைப்பற்று - திருக் கோவில் பிரதான வீதி தம்பி லுவில் பிரதேசத்தில் லொறி ஒன்றுடன் மோட்டார் சைக் கிள் ஒன்று மோதிய விபத்தில் இருவர் படுகாயமடைந்த சம்பவம் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

லொறிச் சாரதியை கைது செய்துள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

திருக்கோவிலில் இருந்து அக்கரைப்பற்றை நோக்கி பயணித்த லொறியும் திருக் கோவிலை நோக்கி பிரயா ணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் தம்பிலுவில் பிரதான வீதி வீ.சி. வீதிக்கு அருகில் நேருக்கு நேர் மோதி விபத் துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் படுகாயமடைந்த நிலையில் திருக்கோவில் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளதாகவும் லொறிச் சார தியை கைது செய்ததுள்ளதாக வும் பொலிஸார் கூறினர். (அ)

